Registered No. M-4483

Madras War Review { TAMIL
12-11-1943

யுத்த சஞ்சிகை

மலர் IV 1943-ம் ஞூ நவம்பர்மீ 12உ, வெள்ளிக்கிழமை இதழ் 11

ஜெர்மானியர்களுடைய திட்டங்கள் நாசம் செய்யப்பட்டன

☆

மார்ஷல் ஸ்டாலின்

இந்த வருஷம் மிகவும் முக்கிய மானது. எப்படி என்ருல், கோடை காலத்தில் முதன் முதலாக, இந்த வருஷந் தான் செம்படைகள் தாக்கிப் போராடின. அதற்கு முந்திய மழை காலத் தாக்குதலைத் தொடர்ந்து தான், இந்தக் கோடை காலத் தாக்குதலும் நடை பெற்றது. மத்தியப் போர் முனை யில் மட்டும் நமது படைகள் 750 மைல் தூரம் முன்னேறி யிருக்கிருர்கள். ஏறக்குறைய 4 லட்சம் சதுர மைல் பரப்புள்ள நாடுகளைக் கைப்பற்றினர் கள். ஸ்டாலின்கிராடிலிருந்து கேர் ஸான் வரை முன்னேறிப் போனுர் கள். சென்ற 12 மாத காலத்தில் ஜெர்மானியர்கள் அடைந்துள்ள தோல்விகளைக் கொண்டு பார்த்தால், அவர் களுடைய எண்ணிக்கை என்ன தான் உயர்ந்த போதிலுங் கூட, அவர்களுடைய தேய்ந்து போன போர்த் திறமையைத் திருத்தி யமைக்க முடியாது என்று தெளிவாகத் தெரிகிறது. ஸ்டாலின்கிராடில் அவர்கள் அடைந்த தோல்வி யினின்று மீள, அவர்களால் முடியவே யில்லை. ஜெர்மன் படைகள் தோற்று விடும் என்று ஸ்டாலின்கிராட் போராட்டம் முன்னதாகவே விளக்கியது. அது போலவே கர்ஸ்க் போராட்டம் ஜெர்மானியர்களை மகா ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக்கி விட்டது என்று விளங்குகிறது. தாம் இழந்த இடங்களையும், ஐரோப்பாவில் தம் கண்ணியத்தையும் மீண்டும் பெறலா மென்று, ஜெர்மானி யர் நம்பிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய திட்டங்களைச் செம்படைகள் நாசஞ் செய்து விட்டன

மார்ஷல் ஸ்டாலின் நவம்பர் மாதம் 6-ம் தேதி ருஷ்யப் புரட்சியின் 26-வது ஆண்டு விழாவன்று மாலையில் செய்த பிரசங்கத்தில் குறிப்பிட்டது

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
ஜெர்மானியர்களுடைய திட்டங்கள் நாசம் செய்யப்பட்டன	1	ஓய்வு மில்லை ! ஒழிவு மில்லை !	7
முகப்புப் படம் : மார்ஷல் ஸ்டாலின்	1	"அமைதியும் ஆக்ரமிப்பு இன்மையும் நம் நோக்கங்கள்"	9
முரசொலி	2	பெரு வெள்ளத்தில் படையினர் தொண்டு ..	10
விளம்பரம் : "விடுதலை"	2	விவசாயக் கருவிகள் செய்ய இரும்பு எஃகு விற்பனை	10
தலையங்கம் : கியெப் கைப்பற்றப்பட்டது ..	3	தென்னிந்திய விமானப் பயிற்சி சாலை ..	11
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4	யுத்த நாட் குறிப்புகள்	12
நலாம டடைக்கு லண்டனில் வரவேற்பு ..	5		
ஜெர்மானியர்கள் தலை தூக்க முடியாது ..	6		

முரசொலி

"நாம் எந்தெந்த கொள்கைகளை முக்கியமாகக் கைக் கொள்ள வேண்டு மென்று முடிவு கட்டி விட்டோம். இந்த மூவரசுகளும் தம் கைச்சரக்கைக் காட்டப் போகின்றன. இது சற்றும் தவறுது. நாம் பெரும் தவறுகள் செய்யா விட்டால், மிகவும் விரைவிலேயே, யுத்தம் மேலும் நடைபெற ஒட்டாமல், தடுத்து விடலாம்."

—பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ், மாஸ்கோ மகா நாட்டைப் பற்றி கூறியது.

* * * * * *

"உங்கள் முன்னேர்கள் அமெரிக்க ஜன நாயகத்தைத் தோற்றுவித்தார்கள். நீங்கள் அதைப் பாதுகாத்துக் காப்பாற்றுகிறீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஆற்றியிருக்கும் அருமையான தொண்டுகளை முன்னிட்டு, நான் என் மனமாற நன்றி கூறுகிறேன். உயிரிழந்த நம் தோழர்களுக்கு மரியாதையோடு நாமனைவரும் வணக்கஞ் செலுத்துவோம். ஆனல், இப்போது நமது எண்ணம் முன்னேறுவதி லிருக்க வேண்டும். ஏனென்றல், நம் எண்ணம் ஈடேறுகிற வரையிலும், நாம் பின் வாங்குவோம் என்ற பேச்சுக்கே இடமில்லை."

—ஜெனரல் அய்சினேவர், வடாப்பிரிக்காவில் அமெரிக்கப் படைகள் இறங்கிய ஆண்டு விழாவை முன்னிட்டு அப் படையினருக்கு நவம்பர்மீ 6-ம் தேதி விடுத்த செய்தி.

* * * * * *

"சோவியத் யூனியன் மக்களையும் தலைவர்களையும் நான் பெரிதும் பாராட்டுகிறேன். படை எடுத்து வந்த எதிரிகளை எவ்வளவு சிறந்த முறையில் செம்படைகள் திருப்பி யடித்து விட்டன ! இது பற்றி நானும் என் நாட்டு மக்களும் உங்களைப் பெரிதும் வியந்து பாராட்டுகிறேம். செம்படைகளுக்கும் சோவியத் மக்களுக்கும் நிரந்தரமான கௌரவமும் புகழும் உரியன. கொடுமையையும் அக்கிரமத்தையும் எதிர்த்து நடத்தப்படும் போராட்டத்தின் சரித்திரத்தில், தம் அழியாப் புகழை அவர்கள் பொறித்துக் கொண்டார்கள் வெற்றியை எதிர் நோக்கிப் போராடும் எல்லாப் படைகளுக்கும் உங்கள் முன் மாதிரிச் செயல்களும், அருந்தியாகங்களும் ஊக்க மூட்டுவனவாயிருக்கின்றன. ஒற்றுமை யுணர்ச்சி நம்மிடையே பெருகி யிருக்கிறது என்பதற்கு, மாஸ்கோ மகா நாட்டு நடவடிக்கைகளே ஏற்ற சான்ருகும். நேச நாட்டுப் படைகள் அக்கிரமக்காரப் படைகளை வெல்லும். நியாயமான முறையில் சமாதானத்தைத் தோற்றுவித்து நிலை நாட்டும்."

—மிஸ்டர் ரூஸ்வெல்ட், ரஷ்யப் புரட்சியின் 26-வது ஆண்டு விழாவின் போது மார்ஷல் ஸ்டாலினுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி.

தமிழ்ப் பெருமக்களே !

"விடுதலை"

உங்களுடைய பத்திரிகையே !!

ஏனென்றல், இது சரியான முறையில் உள்ள பத்திரிகையாகும்.

ராய்ட்டர், அசோசியேட் பிரஸ் தந்திச் செய்திகளை வாசகர்களுக்கு இப் பத்திரிகை அப்படியே தருகிறது.

குறிப்பாகத் தமிழ் நாட்டின் நன்மைக்கு வேண்டிய அகில இந்தியச் செய்திகளை யெல்லாம் வெளியிடுகிறது.

இது எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியாருடைய கருத்தை மட்டும் வெளியிடும் பத்திரிகை யல்ல.

நமது கீழ்த் திசையில் யுத்த மேகம் பரவிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் நலன்களும் உங்களுடைய தனிப்பட்ட நலன்களும் பாதிக்கப்படலாம்.

எனவ, அன்றாட நிகழ்ச்சிகளை அப்போதைக்கப்போது உங்கள் நன்மையை நாடி அறிவித்துக் கொண்டிருக்கும் தொண்டை, "விடுதலை"ப் பத்திரிகை செய்துவரும்.

"விடுதலை" படியுங்கள்.

வருடச் சந்தா : (தபால் மூலம்) ரூ. 24 0-0. சென்னைக்கு ரூ. 20-0-0.
மாத சந்தா : ,, ரூ. 2-2-0. சென்னைக்கு ரூ. 1-12-0.
தபாற் பெட்டி நெம்பர் 325.

மானேஜர்,
"விடுதலை"
சிந்தாதரிப்பேட்டை, சென்னை.

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1943-ம் ஹூ நவம்பர்மீ 12உ, வெள்ளிக்கிழமை | இதழ் 11

கியெப் கைப்பற்றப்பட்டது

ரஷ்யாவிலுள்ள முக்கியமான நகரங்களில் கியெபும் ஒன்று. அது கேந்திர ஸ்தானத்தி லிருக்கிறது. யுத்தத்திற்கு முன்பு, தற்காப்புப் போராட்டத்திற்கு ஏற்ற இடமாக இது ரஷ்யர்களுக்கு உதவியது. இதை திடீரென்று ஜெர்மானியர்கள் 1941-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் வளைந்து கொண்டார்கள். இங்கே வளைந்து கொண்ட அளவிற்கு, வேறெந்த இடத்திலும் ஜெர்மானியர்கள் வளைந்ததே கிடையாது. அதன் பயனாக, அக்டோபர் மாதம் 2-ம் தேதி கியெப் ஜெர்மானியர் வசமானது. அப்போது, ரஷ்யப் படைகள் நசுக்கப்பட்டன; இனி, 'அவை தலை தூக்கவே முடியாது' என்று ஹிட்லர் தன் வழக்கம் போல் டாம்பீகப் பிரசங்கம் செய்தார். இது ஜெர்மானியர் வசமான பிறகு, அதை மத்தியப் போர் அரங்கத்தில் சிறந்த தோர் அரணாக அவர்கள் பயன் படுத்திக் கொண்டார்கள். தன் நோக்கம் நாடு பிடிக்க வேண்டுவதல்லவென்றும், ஆனால், ரஷ்யப் படைகளைப் பூண்டோடு ஒழிக்க வேண்டியது தான் என்றும் ஹிட்லர் முன்பு கூறி யிருக்கிறார். ஆகவே, கியெபைக் கைப் பற்றியதன் மூலம், ரஷ்யப் படைகளை வெட்டி விட்டதனால், தன் நோக்கம் ஈடேறிவிட்டதாக அவர் நினைத்தார். அது தவறு. நாடு பிடிக்க வேண்டுமென்னும் ஆசை, அவருக்குக் கட்டுக் கடங்காமல் இருந்தது. இதைக் கெடுத்தது அவரது அடிப்படையான யுத்த தந்திரம். இதனால் தான் அவர் தனக்குத் தானே நாசத்தைத் தேடிக் கொண்டார். 1941-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 7-ம் தேதி ஹிட்லர் தன் உச்ச நிலையிலிருந்தார். அந்தச் சமயத்தி லிருந்த இராணுவ சரித்திராசிரியர் கூறியதை, இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர் கூறினார்: "நமது வெற்றிகளை ஆபத்திற் குள்ளாக்கக் கூடிய காரியம் ஒன்றே யொன்று தான் உண்டு. அதாவது, நாடு பிடிக்கும் மோப்பத்தினால் மதிமயங்கி யிருக்கும் வெற்றி வீரர்கள், தம் நாச கால வேலையைக் கைவிட்டால் மட்டுந் தான் ஆபத்தேற்படக் கூடும்." இந்த ஆலோசனையை ஹிட்லர் செவிசாய்க்கவில்லை. மாஸ்கோவி லிருந்து முன்னேற ஒட்டாமல், வான் பாக்கின் படைகள் தடுக்கப் பட்டிருந்தன. கியெபிலிருந்த ஜெர்மன் படைகள் நேரே மாஸ்கோவிற்குப் போயிருந்தால், யுத்தத்தின் போக்கே மாறியிருக்கலாம். ஆனால் ஹிட்லர் செய்த தென்ன? நாடு பிடிக்கும் ஆசையை விட, பொருட்களைத் தேடும் ஆசை அவருக்கு அதிகப்பட்டது. எனவே, கிழக்கேயுள்ள உக்ரேன் மீது அவருடைய கவனம் பாய்ந்தது. உக்ரேன் வளம் மிகுந்த நாடு. உணவுப் பொருள் அங்கே அதிகம். நிலக்கரி, இரும்பு, தாமிரம் முதலிய பல வகை உலோகங்களும் அங்கே ஏராளமாகக் கிடைக்கும். எனவே தான், அந்தப் பொருள்களை உதவும் இந்தப் பகுதிகளின் மேல் ஹிட்லர் பாய்ந்தார். இவர் பாய்ச்சல் பயன்பட்டதா? அது தான் இல்லை. ஏன்? ரஷ்யர்கள் நாச வேலைகளில் கை தேர்ந்தவர்கள். தாம் பின்வாங்கிப் போகும் போது, தம் பொருள்கள் எல்லாவற்றையும் நாசம் செய்துவிட்டே கிளம்பினார்கள். தானியம் ஒரு மணி கூட ஜெர்மானியர்களுக்குக் கிடைக்க வில்லை. நிலக்கரி, இரும்பு, தாமிரம் முதலிய சுரங்கங்கள் வேலை செய்ய முடியாதபடி பாழாக்கி விட்டார்கள். அவற்றை பழுது பார்த்து வேலை செய்யத் தக்க நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு, ஜெர்மானியர்களுக்கு நெடு நாட்கள் பிடித்தன. 'வெண்ணெ திரளுகிற போது தாழி உடைந்தது போல,' இந்த வேலைகள் முடிவு பெற்று, அதன் பலனை அனுபவிக்கிற சமயத்தில், அவர்கள் அந்த இடத்தை விட்டே உயிர் தப்பி யோட வேண்டியதாயிற்று. இதற்கு முக்கியமான காரணம் ஸ்டாலின் கிராடில் ஜெர்மானியர் பட்ட தோல்வி யடைந்தது தான். இனி ரஷ்யாவைத் தாக்க வேண்டுமென்னும் எண்ணத்தை ஹிட்லர் கைவிட்டு விட வேண்டிய நிர்ப்பந்த நிலைமை ஏற்பட்டு விட்டது.

இந்த சந்தர்ப் த்திலே, ஒரு கேள்வி எழக் கூடும். அடுக்கடுக்காகப் பல தோல்விகள் அடைந்து கொண்டிருந்த ரஷ்யர்கள் மனத் தளர்வடையாமல் போராடிக் கொண்டிருக்கும் போது, வெற்றி மேல் வெற்றி பெற்றுக் கொண்டு வந்த ஜெர்மானியர் ஒரு சில தோல்விகளினாலேயே, இப்படிப்பட்ட எண்ணங் கொள்ளக் காரணம் என்ன? ரஷ்யர்கள் போராடுவதற் கென்று வகுத்த திட்டத்தின்படியே போராடினார்கள். அதன்படியே தம் தோல்விகளை யெல்லாம் பிற்பாடு வெற்றிகளாக மாற்றிக் கொண்டார்கள். ஆனால், ஜெர்மானியர்கள் வகுத்த திட்டம் கைகொடுக்குதவாதது. அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அது வகுக்கப்பட வில்லை. நாஜிகள் பதட்டத் தன்மையே இதற்குக் காரணமென்று சொல்லலாம். ஆகவே தான், அத்திட்டம் நிறைவேறாமல் திண்டாட்டத்திற்கு உள்ளானார்கள் ஜெர்மானியர்கள். இது வரை ரஷ்யர்களுக்கு கோடை காலத்தில் வெற்றியே கிடைத்ததில்லை. இதை மார்ஷல் ஸ்டாலினே ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த இழிவை நீக்கித் தம் உயர்வை நிலை நாட்டிவிட்டன செம்படைகள். ரஷ்ய நாடுகளையும் புதிதாகச் சேர்க்கப்பட்ட குடியரசையும் விரைவில் மீட்டு விடுவேன் என்று மார்ஷல் ஸ்டாலின் கொடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றுங் காலம் நெருங்கிவிட்டது. ரஷ்யப் போர் முனையில் 700 மைல் நீளத்திற்கு அதிகமாகவே, ரஷ்யப் படைகளின் கை வெகுவாக மேலோங்கியே யிருக்கிறது. ரஷ்யப் புரட்சியின் 26-வது ஆண்டு விழாவின் போது, மார்ஷல் ஸ்டாலின் செய்த சொற் பொழிவில், 'ஜெர்மன் கொடுமைகளை யொழித்து விடுவே' னென்று அவர் திடமாகக் கூறியிருக்கிறார். வெற்றி வீரர் வாய் மொழி பொய்க்குமா? ஒரு போதும் பொய்க்காது.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

டோக்கியோ விருந்து ரஷ்ய-ஜப்பான் உறவு.

நவம்பர் மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஒரு விசித்திரமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ரஷ்யப் புரட்சியின் 26-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, டோக்கியோவிலுள்ள ரஷ்ய ஸ்தானிகர், ஒரு விருந்து நடத்தினார். அந்த விருந்துக்கு ஜப்பான் அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் மாமான் ஷிகமிட்சு, மிஸ்டர் ஒகினோரி கயா முதலிய 150 பிரபலஸ்தர்கள் வந்திருந்தார்கள். சோவியத் ரஷ்யவின் தோற்றத்தை ரஷ்யாவும் ஜப்பானும் கொண்டாடின. ஆனால் ஜப்பானின் நேசரும் ரஷ்யாவின் எதிரியுமான ஜெர்மனியோ, சோவியத் அரசாங்கத்தைக் குறித்து கடிந்து பேசுகின்றது. செம்படைகள் வெற்றி மேல் வெற்றி பெறத் தலைப்பட்டு முன்னதாக, ரஷ்யாவில் கடுமையான யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது, மகா வேகமாக, கிடைத்த எல்லாவற்றையும் ஜெர்மானியர்கள் திரட்டிக் கொண்டு ஓட்ட மெடுத்தார்கள். பசிபிக் மகா சமுத்திரத்தில் நடைபெறும் போராட்டத்தில் ரஷ்யா நடுநிலைமை வகிப்பது சம்பந்தமாக, உண்மை உணராதவர்கள் பல வகைகளில் குறைபாடுகள் கூறிக் கொண்டிருந்தார்கள். சைபீரியாவிலுள்ள தம் தளங்களை, ஜப்பானுக்கு விரோதமாகப் பயன்படுத்த ரஷ்யா ஏன் அனுமதிக்கவில்லை? பசிபிக் மகா சமுத்திரத்தில் நடைபெறும் யுத்தத்தில் ஏன் ரஷ்யாவும் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது? மாஸ்கோவில் மூவரசு மகா நாடு நடைபெற்ற போது. இந்த கேள்வி மீண்டும் கிளம்பியது இந்தக் கேள்வியைக் கேட்பவர்கள் விவாதிப்பதில் மட்டும் கவனம் செலுத்துகிறவர்களே யொழிய, இராணுவ தந்திர முறைகளை உணர்ந்தவர்களல்ல. அன்றியும் மற்றொரு விஷயம் இங்கே கவனிக்கத் தக்கது. தமக்கு ரஷ்ய தளங்களை உதவ வேண்டுமென்று பிரிடிஷ் அரசாங்கமோ அமெரிக்க அரசாங்கமோ, ரஷ்ய அரசாங்கத்தைக் கோரியதில்லை.

விலாடிவாஸ்டாக்கும் கபாராப்ஸ்க்கும் சைபீரியாவிலுள்ள பெரிய விமான தளங்கள். டோக்கியோவிற்கும் இவற்றிற்கும் சுமார் 700 மைல் தூரந் தான். டோக்கியோ ஜப்பானின் முக்கியமான கைத்தொழில் பகுதி. ஆகவே, இதை விமானங்களிலிருந்து தாக்குவது முடியாத காரியம் என்று தான் சொல்ல வேண்டும். பல வகைகளில் ருஷ்யாவிற்குச் சாதகமாயிருப்பவை ஜப்பானுக்குப் பாதகமாகவும், ஜப்பானுக்குச் சாதகமாயிருப்பவை ருஷ்யாவிற்குப் பாதகமாகவுமிருக்கின்றன என்பது உண்மை தான். மஞ்சூரிய எல்லைப்புரத்தில் இந்த இரண்டு நாட்டாருக்கும் கடுமையான பகைமை இருந்து கொண்டிருந்தது என்பதும் உண்மை தான். ஏறக்குறைய 10 வருஷங்களுக்குள்ளாக அங்கே 2,500 முறை கலவரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதற்கு முன்புங் கூட பல முறை கலவரங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

1919-ம் வருஷம் சைபீரியாவில் உள்நாட்டுக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் பார்த்து, ஜப்பான் சைபீரியாவின் கடற்கரை மாகாணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. விலாடிவாஸ்டாக்கும் அதற்கு உட்பட்டது தான். மூன்று வருஷங்கள் ஜப்பானியர் வசம் அம் மாகாணம் இருந்தது. அதன் பிறகு தான் மீண்டும் ரஷ்யர் வசமானது. 1904-05-ல் நடைபெற்ற ரஷ்ய ஜப்பான் யுத்தத்திற்குப் பிறகு, ரஷ்யாவிற்குச் சொந்தமான சகாலின் என்னும் தீவின் தென் பகுதி, ஜப்பானியர்களுக்குச் சொந்தமாகி விட்டது. இங்கே ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. மகா யுத்தத்திற்குப் பிறகு வட பகுதியையும் ஜப்பானியர்கள் தம் நாடுகளோடு சேர்த்துக் கொண்டார்கள். 1925-ம் வருஷந் தான் ஜப்பானியர்கள் அந்தத் தீவைக் காலி செய்தனர். 1924 முதல் 1927-ம் வருஷம் வரை, சீனப் புரட்சிக்கு ரஷ்யர்கள் உதவினர். பிறகு அவர்கள் சீனாவினின்று வெளியேறி விட்டனர். ஐந்து வருஷங்களுக்குப் பிறகு தான், சீனாவோடு ரஷ்யாவிற்கு சமரச நிலைமை ஏற்பட்டது.

இந்த யுத்தத்தில் சீனாவுக்கு ரஷ்யா ஓரளவிற்கு உதவியிருக்கிறது இதை ஜப்பானியர்கள் ஆட்சேபித்தார்கள். அப்போது ரஷ்ய அந்நிய நாட்டு மந்திரியாயிருந்தவர் லிட்வினப். இவர் சரியபடி பதில் கூறினார். "சீனா மீது ஜப்பான் போர் தொடுத்து விட்டதாக அறிவிக்கவில்லை. ஆகவே, சீனாவுக்கும் ஜப்பானுக்கும் போராட்டம் நடைபெறுவதாக ஒப்புக் கொள்ளவே முடியாது; போராட்டமில்லாத போது ரஷ்ய விமானங்கள் போராட்டத்தில் எப்படிப் பங்கு கொள்ள முடியும்?" என்று கேட்டார். அதுவரை ரஷ்யா சீனாவிற்கு நேர்முகமாகப் பல வகைகளில் உதவியிருக்கக் கூடும்; ஆனால் இது சீனாவிற்கு மறைமுகமான உதவியாயிருந்தாலும் மிகவும் முக்கியமானது. சோவியத் எல்லைப் புரத்தில் எப்போதும் பெரும்படை யொன்றை வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமையை ரஷ்யா உண்டாக்கி விட்டது. ரஷ்யாவோடு தகராறுகள் ஏதேனும் நேர்ந்தால் உடனே பயன்படத் தக்கபடி முதல்தரமான 8 லட்சம் பேர்களைக் கொண்ட படையை ஜப்பானியர்கள் மஞ்சூரியாவில் இருப்பாக வைத்திருக்கிறார்களென்று ஜெர்மனியிலிருந்து கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது. ரஷ்யாவுடன் தகராறுகள் இல்லாதிருந்தால், இந்தப் படை சீனாவுடனாவது பசிபிக் மகா சமுத்திரத்திலாவது போராடிக் கொண்டிருக்கும். சமாதான காலத்தில் இந்தப் படைக்கு 500 டாங்கிகளும் 1000 விமானங்களும் உண்டு. இப்போது இவற்றின் எண்ணிக்கை மிகவும் அதிகப்பட்டிருக்க வேண்டும். அன்றியும் சைபீரியாவை யடுத்துள்ள கடலில் பெரியதோர் ஜப்பானிய கடற்படை யிருக்கிறது. இதைச் சேர்ந்த கப்பல்கள் சிறியவை. மகா வேகமாகப் போகக்கூடியவை. மகா திறமை வாய்ந்தவை. இந்தக் கப்பல்கள் பீரங்கிப் படையுள்ள 6 டிவிஷன்களை ஏற்றிப் போகக்கூடும். இந்தப் படை, நேசநாடுகளோடு போர்புரிய மாட்டாமல் இருப்பதற்கு, ரஷ்யா தான காரணம். நேச நாடுகளுக்கு ரஷ்யா செய்யும் வசதிகளுள் இதுவும் ஒன்றல்லவா?

அப்படியானால், ஜப்பான் மீது ஏன் ரஷ்யா இன்னும் போர் தொடுக்கவில்லை யென்னும் கேள்வி எழுகிறது. இந்தக் கேள்விக்கு இன்னும் விடை யளிக்கப்படவில்லை. இதற்கு விடை தேடு முன்னதாக, இதற்குச் சற்று முன்னதாக நிகழ்ந்தவற்றைக் குறித்துக் கவனிப்போம். மிஸ்டர் வால்டர் டுரான்டி இதுபற்றி கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

> "சாதாரணமாக, ரஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் போர்மூளத் தான் செய்யுமென்று யாரும் சொல்லுவார்கள். இரண்டு கட்சிகளும் தோல்வியடைந்தால் உலகம் முழுவதுமே மகிழ்ச்சி யடையும்."

ஆனால் கொடுமையை எதிர்த்து விடுதலைக்காக ரஷ்யா இவ்வளவு தூரம் போராடிய பிறகு, அப்படிப்பட்ட எண்ணம் அவர்களுக்கிருக்காது. உலகம் முழுவதுமே எதை விரும்பும், எதற்காகப் பிரார்த்திக்குமென்றால், **ஜப்பானுக்கும் ரஷ்யாவிற்கும் போர் மூளாது: மூண்டாலும் ரஷ்யர்கள் தான் வெற்றி பெற வேண்டுமென்று தான் விரும்புவார்கள்.** ரஷ்யா வெற்றி பெறத் தான செய்யும். ஏனென்றால், தகுந்த முன் யோசனையோடு அது தன் எல்லைப் புறங்களை உறுதிப்படுத்தி யிருக்கிறது. ஒரே சமயத்தில் ஜெர்மனியையும் ஜப்பானையும் எதிர்த்துப் போராடக் கூடிய நிலைமையிலிருந்தது. ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரி மட்சுவோக்கா பெர்லினுக்குப் போய் அங்கிருந்து மாஸ்கோவுக்குப் போய்ச் சேர்ந்தபோது, ரஷ்யாவோடு ஒரு **ஐந்து வருஷ சமரச ஒப்பந்தம் செய்து கொள்ள** வேண்டுமென்று, விரும்பினார். இதற்கு ஸ்டாலினும் இணங்கினார். ஏனென்றால், அவருடைய எண்ணமெல்லாம் பசிபிக் சமுத்திரத்தில் உள்ள தம் நாடுகளிலேயே பதிந்திருந்தது அன்றியும் ஜப்பானை விரோதித்துக் கொள்ள அவர் விரும்பாததற்கு மற்றொரு காரணமுமுண்டு. ரஷ்யா மீது ஜெர்மனி போர் தொடுக்கலாம் என்ற முன் யோசனை அவருக்கிருந்தது. ஆகவே தான், 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ரஷ்ய-ஜப்பான் சமரச உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின் படி, இந்த இரண்டு நாடுகளும் ஒன்றோடொன்று சமாதானத்தோடும் சினேக பாவத்தோடும் நடந்து கொள்ள வேண்டும். ஒருவர் நாட்டை மற்றொருவர் ஆக்ரமிக்கக் கூடாது. வேறெந்த அரசாங்கத்தோடாவது இவற்றில் ஒன்றிற்குத் தகராறுகள் ஏற்படுமானால், மற்றொன்று நடுநிலைமை வகிக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு ஜப்பானுக்கு வேறு காரணமுண்டு. தான் தென்கிழக்குப் பசிபிக் மகா சமுத்திரத்தில் மாபெரும் போராட்டத்தை நடத்துகிற போது ரஷ்யா தன்னைத்

(11-ம் பக்கம் பார்க்க.)

நாலாம் படைக்கு லண்டனில் வரவேற்பு

மன்னர்பிரானே பதக்கம் சூட்டினுர்

இந்தியப் படைகளின் வீரச் செயல்கள்

லண்டன் பி.பி.சி. வானெலி நிலையத்தி லிருந்து சர் சாமியல் ரங்கநாதம் அவர்கள், சமீபத்தில், ஒரு பிரசங்கத்தை ஒலி பரப்பினுர். இந்தியர்கள், போர்முனையில் சாதித்துள்ள அருஞ் செயல்களைக் குறித்து அப்போது பேசினுர். அதன் மொழி பெயர்ப்பு வருமாறு:—

ஆப்பிரிக்காக் கண்டத்திலிருக்கும் எகிப்து, லிபியா, துனிசியா முதலிய பல போர் முனைகளிலும் நான்காவது இந்தியப் படை சாதித்துள்ள அருஞ் செயல்கள், பிரிட்டானிய மக்களைத் திடுக்கிடச் செய்து விட்டன. பெரும் புகழ் பெற்றிருக்கும் இந்தப் படையினரை வரவேற்க, தமக்கும் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று விரும்பினர். நேச நாடுகள் வெற்றி பெறும் பொருட்டு, இது வரை அந்தப் படையினர் செய்துள்ள உதவிகளையும் அருஞ் செயல்களையும் தகுந்த முறையில் அப்படையினர் முன்னிலையில் பாராட்டுவதற்குத் தமக்குச் சந்தர்ப்பங் கொடுக்க வேண்டு மென்றும் கோரினுர்கள்.

இது, போராட்டங்கள் மும்முரமாக நடை பெறுங் காலம். புதிய புதிய முறையில் எதிரிக்கு அடிகள் விழுந்து கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்ட சமயங்களில், சாதாரணமாக அவர்களைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்ய முடியாது அதற்கான வசதிகளுமில்லை. ஏனென்றுல், குறிப்பாக, பிரிட்டிஷாரையும் இந்தியர்களையுங் கொண்ட இந்தப் படையினர், தம் அடுத்த லட்சியத்தை நோக்கித் தாக்கிக் கொண்டு போவதிலேயே கண்ணுங் கருத்தோடும் ஆவலோடு மிருக்கின்றுர்கள். எட்டாம் படையைச் சேர்ந்த ஜெனரல் மண்காமரி தான் இந்தப் படையின் ஊக்கம் மிகுந்த தலைவர். ஆனுலும் பிரிட்டானிய மக்கள் அடுத்தடுத்து கோரிக் கொண்டதனுல், அந்தப் படையைச் சேர்ந்த 33 உத்தியோகஸ்தர்களும், கமிஷன் பெருத உத்தியோகஸ்தர்களும், ஒரு சில படையினரும் கொஞ்ச காலம் இங்கிலாந்தில் சுற்றுப் பிரயாணம் செய்யும்படி, அனுப்பப் பட்டனர்.

மகத்தான ஸ்தல ஸ்தாபனங்கள் அளித்த மரியாதைகள்

இந்தக் கோஷ்டியார் செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் பிரிட்டன் வந்து சேர்ந்தார்கள். பிரிட்டனிலுள்ள மகத்தான ஸ்தல ஸ்தாபனங்களும் உத்தியோக அதிகாரிகளும் வரவேற்று உபசரித்தனர். இந்தத் தலைசிறந்த கோஷ்டியினரை லண்டன் லார்டு மேயர் அவர்களும், லண்டன் கௌண்டி கௌன்சில் தலைவரும், லண்டனின் கீழ்பக்கத்திலுள்ள பல பகுதிகளின் (பரோக்களின்) மேயர்களும் வரவேற்றனர்.

லண்டனுக்குக் கிழக்கேயுள்ள பகுதிகளில் (பரோக்களில்) உள்ள மக்கள் நான்காவது இந்தியப் படையினரை வரவேற்ற குதூகலத்தையும் பேருக்கத்தையும் பற்றி நான் பெரிதும் பாராட்டுகிறேன். இந்தப் பெரு மிதத்தை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன். இந்தப் பகுதிகளிலுள்ளவர்கள் தான், எதிரி விமானங்களின் மகா கடுமையான தாக்குதல்களுக்கு ஆளானவர்கள். அந்த பிரிட்டானிய யுத்தத்தின் போது, அவர்களுடைய உயிர்ச்சேதத்தையும் பொருட் சேதத்தையும் நேரில் கண்டவர்கள் தான் செவ்வையாக உணர்ந்து கொள்ள முடியும்.

அந்தக் கூட்டத்திலே, நம் படையினரை வெகுவாகப் புகழ்ந்து பலர் பேசினுர்கள். அப்போது என் மனதில் ஒரு விஷயம் பட்டது. அது என்னவென்றுல், இங்குள்ளவர்கள் வீரமுடையவர்கள் ; அமைதியாகவும் பிடிவாதத்தோடும் போராடக் கூடியவர்கள் ; ஒரு இராணுவப் படையின் வீரத்தையும் போர்த் திறமையையும் பாராட்டக் கூடியவர்கள் இவர்கள் தான் என்ற எண்ணம் எனக்கு உண்டானது. இங்கே, உண்மையிலேயே, எல் அலமீனிலும் துனிசியாவிலும் வெற்றி வாகை சூடிய வீரர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

இந்திய விடுதியில் விருந்து

ஒரு பிற்பகலில் இந்தியா விடுதியில் அவர்களுக்கு ஒரு விருந்து நடைபெற்றது. அப்போது, இங்கிலாந்திலுள்ள பல இந்தியர்களை அவர்கள் சந்தித்தார்கள். இவர்களை வரவேற்பது மகிழ்ச்சி தரத் தக்கதாகவும் பெருமையானதாகவு மிருந்தது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், பல பட்டாளங்களிலிருந்தும் இந்தப் படையில் சேர்ந்திருக்கிருர்கள். இந்தப் பட்டாளங்களின் பெயர்கள் இராணுவ சரித்திரத்திலே இடம் பெற்று விட்டன.

சென்னை, வங்காளம் ஆகிய மாகாணங்களி லிருந்தும், பலூச்சி துருப்புகள், கூர்க்கா 'ரைபில்ஸ்', பஞ்சாபி துருப்புகள், 'ராஜ்புடானு ரைபில்ஸ்' மராட்டா 'லைட்' காலாட் படை முதலியவற்றின் வைசிராய் கமிஷன் உத்தியோகஸ்தர்களும் அங்கே விஜயம் செய்திருந்தனர். இந்திய சமிக்ஞைப் படையைச் சார்ந்தவர்களும், இந்திய இராணுவ 'ஆர்டினென்ஸ்' படையினரும் கூட வந்திருந்தனா. துனிசியாப் போராட்டத்தில் வீரப் பதக்கம் (விக்டோரியா க்ராஸ்) பரிசு பெற்ற புகழ் பெற்ற சுபேதார் லால் பகதூர் தபாவும் விஜயம் செய்திருந்தார். அன்றியும், 'ராயல் சப்போக்ஸ்', 'தி எஸ்ஸெக்ஸ்', 'தி ராயல் ஆர்டில்லெரி' ஆகிய படைகளைச் சேர்ந்த வாரண்ட் ஆபீசர்களும் கமிஷன் பெருத உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள். இவர்கள் ஆப்பிரிக்காவில் சாதித்துள்ள அருஞ் செயல்களை ஒப்புயர்வு இல்லாதவை என்று எதிர் காலத்தவர்களுங் கூடக் கூறுவார்கள். இந்தக் கோஷ்டியினருக்குத் தலைமை தாங்கி வந்தவர், கர்னல் ஸ்காட். இவரை 'டிஸ்டிங்விஷ்ட் சேர்விஸ் ஆர்டரில்' மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் சேர்த்துக் கொண்டார்.

பக்கிங்ஹாம் அரண்மனையில்

ஒரு நாள் பிற்பகல் வெயில் காய்ந்து கொண்டிருந்தது. பக்கிங்ஹாம் அரண்மனைச் சதுக்கத்தில் நான்காவது இந்தியப் படை அணிவகுத்து நின்றது. நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரானும் அரசியாரும் அங்கு விஜயம் செய்து, அவர்களைப் பார்வையிட்டார்கள். சுபேதார் தபாவுக்கு வீரப் பதக்கத்தை (விக்டோரியா க்ராஸ்) அணிந்தார்கள். கமிஷன் பெருத மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் பதக்கங்கள் வழங்கினுர்கள்.

மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அப்போது என்னிடம் கூறியதாவது :—

"வடாப்பிரிக்காவிற்கு நாம் போயிருக்கும் போது, பதக்கங்கள் நெஞ்சில் தொங்கவிடப்படும் நாடா (ரிப்பன்) வை தாபாவிற்கு நாம் அணிந்தோம், என்று உங்களுக்குத் தெரியும். மீண்டும் அவரை இங்கே கண்டு இந்தப் பதக்கத்தை அவருக்குப் பரிசளிக்கிறது எமக்குப் பெரும் மகிழ்ச்சி தருகிறது."

அன்று பிற்பகலில் நடைபெற்ற விழா எவ்வளவு மகத்தானது என்பது பற்றியும் அவர்கள் கொண்டிருந்த பெரும் எண்ணம் நிறைவேறிவிட்டது என்பது பற்றியும் எவ்வளவு மகிழ்ச்சி கொண்டிருக்கிருர்கள் என்பது எல்லோருக்தும் நன்றுகத் தெரியும். இது பற்றி எனக்குக் கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.

இந்த நான்காவது இந்தியப் படையினர் பிரிட்டனில் செய்த சுற்றுப் பிரயாணம் பற்றிய அறிக்கைகள் எனக்குக் கிடைத்தன. மிகவும் வெற்றிகரமாகவே அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்களென்று அவற்றினின்று விளங்குகிறது. சென்ற விடங்களி லெல்லாம் பிரிட்டானிய மக்கள் அவர்களுக்கு மகத்தான வரவேற்புக்கள் அளித்திருக்கிருர்கள். பிரிட்டனிலுள்ள பல நகரங்களுக்தும், தொழிற்சாலைகளுக்கும், நாட்டுப்புறங்களுக்கும் தாம் விஜயம் செய்ததுபற்றி, அவர்களே பெரிதும் திருப்தி கொண்டிருக்கிருர்கள்.

உஷ்ணப் பிரதேசக் கடல்களில் வீரச் செயல்கள்

சில நாட்களுக்கு முன்பு 'லண்டன் கெஜட்'டில் ஒரு அறிவிப்பைக் கண்டேன். லிபியா பாலைவனத்திலிருந்த என் எண்ணங்க ளெல்லாம் உஷ்ண தேசக் கடல்கள் மீது பாய்ந்தன. மிஸ்டர் அனந்தன் நாயர், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய 'எக்ஸால்டெட் ஆர்டர்' சிவில் டிவிஷன் அதிகப்படி அங்கத்தினரா யிருக்கும்படியும், வியாபாரக் கப்பற் படையைச் சேர்ந்த ஒரு 'போட்ஸ்வெய்னு'க்கு சிவில் டிவிஷனைச் சேர்ந்த 'பிரிட்டிஷ் எம்பையர் மெடல்' கொடுக்கப்படவேண்டு மென்றும், மன்னர்பிரான் பெருமகிழ்ச்சியுடன் கட்டளை யிட்டிருக்கிருர்களென்று அந்த அறிக்கை கூறியது.

மிஸ்டர் அனந்தன் நாயர் அந்த வியாபாரக் கப்பற் படையின் இரண்டாவது ரேடியோ உத்தியோகஸ்தர். அவருக்கு அளிக்கப்பட்ட எம்.பி.இ. பட்டத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது : "பாதுகாப்பாகப் போகும் இந்தக் கப்பலை, மணிக்கு மணி மூன்று ஜப்பானிய க்ரூய்சர் கப்பல்கள் தாக்கிக் கொண்டே யிருந்தன. அதை அடுத்தடுத்து அவை சேதப்படுத்தின. கம்பியில்லாத் தந்தி இயந்திரம் பழுதாகி விட்டது. கப்பலுக்குள் தண்ணீர் ஏறி முழுக ஆரம்பித்தது. கப்பலைக் கைவிட்டு விட வேண்டு மென்னும் கட்டளை பிறந்தது. இரண்டு படகுகளிலும் சிறு சிறு படகுகளிலும் அதிலிருந்தவர்கள் இறங்கிக் கொண்டார்கள். மற்றெரு படகும் அக்கப்பலிலிருந்து இறக்கப்பட்டது. மற்ற படகுகளிலிருந்தவர்களிற் சிலர் இதில் வந்து ஏறிக் கொண்டார்கள். இந்தக் கப்பலை இடைவிடாது எதிரிகள் தாக்கிக் கொண்டிருந்த போதிலும், கப்பலில் நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருந்த போதிலும் மகா வீரத்தோடும் மன அமைதியோடும், தன் இடத்தை விட்டு அகலாமல் கடைசி வரை இருந்தார் மிஸ்டர் அனந்தன் நாயர். கப்பல் மூழ்கிய பிறகு, அந்தக் கப்பலைச் சேர்ந்த பலர், அங்கே மிதந்து கொண்டிருந்த கட்டைகளைப் பற்றிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கடலில் சுரா மீன்கள் வெகு அதிகம். என்றுலும், அவர் இந்த ஆபத்துக்களைப் பொருட் படுத்தவில்லை. தண்ணீருக்குள் பல முறை மூழ்கி, தவித்துக் கொண்டிருந்த பலரை, பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்."

படகு 'ஸ்வெயின்' வீரம்

குடால்கனலில் எதிரி விமானங்கள் கீழ் நோக்கிப் பாய்ந்து வெடி குண்டுகளை எறிந்தன. அப்போது, கடற் கரைக்குச் சற்று தூரத்தில் ஒரு பிரிட்டிஷ் படகு நங்கூரம் பாய்ச்சப் பட்டிருந்தது. அந்த பிரிட்டிஷ் படகைச் சேர்ந்த படையினர் கரையில் தோண்டப்பட்டிருந்த குழிகளில் பதுங்கிக் கொண்டிருந்தனர். கரைக்கு வந்து கொண்டிருந்த மற்றெரு கப்பலை எதிரி விமானங்கள் குண்டுகளால் தாக்கின. அது நெருப்புப் பற்றி கொண்டது. ஆகவே கட்டுக் கடங்காமல் தண்ணீரில் மிதந்து கொண்டு வந்தது, கடைசியாக, நங்கூரம் பாய்ச்சியிருந்த பிரிட்டிஷ் படகுக்கும் அத்தீ பரவி விட்டது. கரையிலிருந்த அந்தப் படகு 'ஸ்வெயின்' தண்ணீரில் குதித்தார். தன் படகுக்கு நீந்தித் சென்றுர். அதன் மீதேறி இயந்திரத்தை யோட்டினுர். எரிந்து கொண்டிருந்த பொருள்களை யெல்லாம் கடலில் எறிந்தார். பிறகு நங்கூரத்தை எடுத்தார்.

பிறகு, அந்தப் படகை ஆபத்தினின்று காப்பாற்றி, பாதுகாப்புள்ள இடத்திற்குக் கொண்டு போய் நங்கூரம் பாய்ச்சினுர். இந்த அருந் தீரச் செயலை அவர் செய்து கொண்டிருக்கும் போது, சில அடிகள் தூரத்தில் தான், தாக்கப்பட்ட கப்பல் புகையை ஏராளமாக கிளப்பிக் கொண்டு எரிந்து கொண்டிருந்தது. அந்தப் படகிலிருந்த வெடி மருந்து வெடித்ததனுல் அவர் காயப்பட்டார்.

போர்முனைகளிலும், நடுக்கடலிலும், ஆகாயத்திலும் இந்தியர்கள் மிகத் திறமையோடு தம் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிருர்கள். அவர்களைப்பற்றி நாம் பெருமை யடைகிறேம்.

ஜெர்மானியர்கள் தலை தூக்க முடியாது

தம் குற்றங்களுக்கு அவர்கள் ஈடு செய்ய வேண்டும்

சோவியத் ஆண்டு விழாவில் ஸ்டாலின் பிரசங்கம்



"நியாயத் தீர்ப்பு நாள் நெருங்கிவிட்டது. நம் நாட்டைத் தாக்கியவர்களை நம் நாட்டை விட்டே விரட்டி விடக்கூடியதோர் நிலைமை ஏற்பட்டுவிட்டது," என்று மார்ஷல் ஸ்டாலின் சோவியத் புரட்சி ஆண்டு விழாவின் போது (நவம்பர் 6) மாஸ்கோவில் ஒரு பிரசங்கத்தில் கூறினர்.

"சிதறுண்டு போன தம் கண்ணியத்தை மீண்டும் நிலை நாட்ட வேண்டி, ஜெர்மானியர் போட்ட திட்டத்தை செம்படைகள் சின்னபின்னப்படுத்திவிட்டன. இந்த வருஷம் செம்படைகள் அடைந்த வெற்றிகளின் பயனாக, நிலைமை அடியோடு மாறிவிட்டது," என்று அவர் மேலும் கூறினர்.

நவம்பர் மாதம் 6-ம் தேதி நடைபெற்ற சோவியத் ரஷ்யாவின் 26-வது ஆண்டுவின் போது மாஸ்கோ நகரத்திலிருந்து மார்ஷல் ஸ்டாலின் செய்த சொற்பொழிவின் சுருக்கமாவது :—

நேச தேசப் படைகள் ஜெர்மனியை விமானங்களில் வந்து தாக்குவது, இரண்டாவது போர்முனை போன்றது ; அன்றியும் ஒழுங்காகத் தளவாடங்களை அனுப்பிக் கொண்டிருந்ததனால் கோடை காலத் தாக்குதலில் ரஷ்யர்கள் வெற்றிபெற பெரிதும் உதவியாயிருந்தது, என்று மார்ஷல் ஸ்டாலின் கூறி ஆங்கிலோ-அமெரிக்க நேசர்களின் உதவியைப் பாராட்டிப் பேசினர்.

அவர் மேலும் கூறியதாவது :—மகா கடுமையாக முயற்சித்துங் கூட, இந்த வருஷம் நம் எதிரிகள் ஒரு இடத்திலாவது வெற்றி பெறவில்லை. ஜெர்மானியர்களை நாம் கோடை காலத்தில் தாக்கி வெற்றி பெற்றது இது தான் முதல் தடவை. நம் அடி தாளாது ஜெர்மன் படைகள் தலை இறு இறுத்துப் போய், நாடுகளை விட்டு விட்டு ஓட்டமெடுக்கிறார்கள்.

ஏராளமான தளவாடங்களையும் காயப்பட்டவர்களையும் அங்கங்கேயே போட்டுவிட்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென்று ஓடுகிறார்கள். நாம் சென்ற மழை காலத்தில் பெற்ற வெற்றிகளை யொட்டியே இந்த வருஷக் கோடை காலத்திலும் வெற்றிகள் அடுத்தடுத்து அடைந்து வருகிறோம். இதனால், கோடை காலத்தில் ரஷ்யர்கள் வெற்றி பெற முடியாது என்பது வீண் கதையாகி விட்டது.

மத்தியப் பகுதியில் மட்டும் நம் படைகள் 750 மைல்கள் முன்னேறி விட்டன. சுமார் 4 லட்சம் சதுர மைல் நாடுகளை மீட்டு விட்டன. ஸ்டாலின் கிராடிலிருந்து கேர்சான் வரை முன்னேறிவிட்டன.

ஜெர்மன் திட்டங்கள் நாசம்

சென்ற ஒரு வருஷ காலத்தில் ஜெர்மானியர் அடைந்துள்ள சேதத்தைக் கொண்டு பார்த்தால், ஜெர்மானியர்களின் படை எண்ணிக்கையில் என்னதான் உயர்ந்தாலும் பழைய திறமையை மீண்டும் அடைய முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது ; ஸ்டாலின்கிராடில் ஜெர்மானியர்கள் அடைந்த தோல்வியிலிருந்து தலை தூக்க அவர்களால் முடியவேயில்லை.

ஜெர்மன் படைகள் தோற்றுவிடுமென்று ஸ்டாலின்கிராட் போராட்டம் முன்னதாகவே விளக்கியது. அதுபோலவே கர்ஸ்க் போராட்டத்தினல் முன்னதாகவே நடந்த போராட்டத்தில், ஜெர்மானியர்கள் மகா ஆபத்தான நிலைமைக்கு உள்ளாகினர்கள் என்று விளங்கியது. தாம் இழந்த இடங்களையும் கண்ணியத்தையும் மீண்டும் பெறலாமென்று ஜெர்மானியர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய திட்டங்களைச் செம்படைகள் நாசஞ் செய்துவிட்டன.

சென்ற வருஷத்தில் எதிரிகளுக்கு 40 லட்சம் பேர்களும், 25,000 டாங்கிகளும் 40,000 பீரங்கிகளும் நஷ்டம். ஆரம்பத்திலிருந்த பாசிஸ்ட் படைகளுக்கும் இப்போதுள்ளவற்றிற்கும் மிகுந்த வேற்றுமையுண்டு. சென்ற வருஷம் 40 டிவிஷன் ஜெர்மன் படைகள் போராடின ; இப்போது 257 டிவிஷன்கள் தான் போராடுகின்றன. சென்ற வருஷம் நடந்த போரிலிருந்து ஒரு விஷயம் விளக்கமாக மெய்ப்பிக்கப் பட்டுவிட்டது. அதாவது, மழை காலத்திலும், கோடை காலத்திலும் நாம் ஜெர்மானியர்களை விரட்டியடிக்கக் கூடுமென்று மெய்ப்பித்து விட்டோம். இப்போது டினீப்பர் ஆற்றின் மேலக்கரையில் எதிரிகளை செம்படைகள் வென்று கொண்டிருக்கின்றன. ஆரம்பத்திலிருந்த அளவிற்கு இப்போது ஜெர்மன் படைகள் அங்கே இல்லை.

ஜெர்மானியர்கள் அனைவரும் படையில் சேரவேண்டு மென்று நாஜிகள் செய்த முயற்சி பலிக்கவில்லை. நமது படைகளோ நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. சோவியத் மக்களின் தலைசிறந்த ஆதரவினல் தான் செம்படைகள் வெற்றி பெறுகின்றன.

இந்த யுத்த காலம் முழுவதிலும், நம் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகியிருக்கிறது. நாம் நம் தொழிற்சாலைகளையே கிழக்குப் பிரதேசங்களுக்கு மாற்றிக்கொண்டது மட்டுமல்லாமல், முந்திய உற்பத்தியை விட, அதிகமாகவே நாம் இப்போது உற்பத்தி செய்கிறோம். சோஷியலிஸ்ட் சிக்கன முறையின் பயனாக, அநேக உற்பத்தி வீரர்கள் தோன்றியிருக்கின்றனர்.

ஒரு காலத்தில், தம்மிடந் தான் வெகு அதிகமான டாங்கிகளும் விமானங்களு மிருக்கின்றன வென்று ஜெர்மானியர்கள் பெருமையடித்துக் கொண்டதுண்டு. இந்த நிலைமை மாறிவிட்டது. நமது பட்டணங்களிலும் கிராமங்களிலும் சமாதான காலத்தில் உற்பத்தியானவை யெல்லாம், யுத்தகால உற்பத்திகளாக மாறிவிட்டன. கிராமவாசிகள் பல அரிய வீரச் செயல்க ளாற்றி யிருக்கின்றனர்.

முக்கியமான விவசாயப் பகுதிகளெல்லாம் கூட எதிரிகள் வசமான போதிலும் நம் சோவியத் மக்களுக்கு உணவு சப்ளையும், தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருட்களும் குறைவு படவில்லை. ஆரம்பத்திலிருந்ததை விட, யுத்தத்திற்குப் பிறகு, சோவியத் அரசாங்கம் மிகவும் பலம் பெற்றிருக்கும்.

ஜெர்மன் படைகள் நம் நாட்டை நாசஞ் செய்துகொண்டே பின் வாங்குகிறார்கள். நம் சோவியத் ஆட்சியை யழிக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள். அவர்களை நாம் மன்னிக்க முடியாது. இக் குற்றங்களுக்கு அவர்கள் ஈடு செய்ய வேண்டும்.

இந்த யுத்தத்திலேயே சென்ற வருஷந் தான் மகா நெருக்கடியான பருவம். செம்படைகள் அடைந்த வெற்றிகளால் நிலைமை மாறிவிட்டது.

நேச நாடுகளின் புகழ்

நேச நாடுகளின் நட்புரிமையும் கூட்டுறவும் மாஸ்கோ மகா நாட்டின் பயனாக நமக்கு மேலும் உறுதிப்பட்டிருக்கின்றன. நேச நாடுகளின் பலம் குன்றும் என்று எதிரிகள் எதிர் பார்த்தார்கள் ; ஆனால் அது பெருகிக் கொண்டிருக்கிறது. இதற்கு, மாஸ்கோ மகா நாட்டின் சரித்திர சம்பந்தமான தீர்மானங்களே தக்க சான்றுகளாகும்.

எதிரியின் இராணுவ பலத்தைக் குறைக்க வேண்டி, எதிரி உற்பத்திச் சாலைகளின் மீதும் முக்கியமான தொழிற் சாலைப் பகுதிகளின் மீதும் நேச நாட்டு விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குகின்றன. இவ்வாறாக நமது முயற்சிகளுக்குச் சாதகங்கள் ஏற்படுகின்றன. இது இரண்டாம் போர் முனைக்குச் சமமானது. உண்மையான இரண்டாம் போர் முனை ஆரம்பமாகத் தாமத மகாதென்று நம்புகிறோம்.

தம் கையிற் சிக்கியவர்களை ஜெர்மானியர்கள் செய்யும் கொடுமைகளிலிருந்து அவர்கள் மன நிலை எவ்வளவு தடுமாட்டத்திலிருக்கிற தென்று விளங்குகிறது. அவர்கள் நிலைமை எவ்வளவிற் கெவ்வளவு சீர் கெட்டுப் போகிறதோ, அவ்வளவிற் கவ்வளவு அவர்களுடைய கொள்ளைகளும்

(11-ம் பக்கம் பார்க்க.)

ஓய்வு மில்லை! ஒழிவு மில்லை!

ஏதோ ருஷ்யர்கள் வீராவேசத்துடன் போர் புரிகிறார்கள். எல்லாம் தங்கள் நாட்டு எல்லை தாண்டும் வரை தான் அவர்கள் இப்படிப் போர் புரிவார்கள்; அப்புறம் பேசாதிருந்து விடுவார்கள். சில துரைமார் வீடுகளில் நாய்கள் இருக்கும். யாராவது அந்தத் துரை வீட்டிற்குள் நுழைந்து விட்டால் போதும். அது மனுஷனானாலும், மாடு, ஆடு, கோழியானாலும் சரி, அந்த வீட்டு காம்பவுண்டுக்கு வெளியே உள்ள ரோட்டு வரை, துரத்திக்கொண்டே சென்று விட்டு விட்டுத் தான் திரும்பும். தானும் காம்பவுண்டிற்கு வெளியே செல்லாது. இந்த மாதிரி செய்வார்கள் தாங்கள் பிறந்த நாட்டின் மீது அளவுகடந்த விஸ்வாசம் கொண்ட ருஷ்ய வீரர்கள் என்று, ஜெர்மானியரும், அவர்களுக்கு துரதிருஷ்ட வசமாக எங்கிருந்தோ வந்து வாய்த்த தலைவர் ஹிட்லரும் எண்ணிக் கொண்டிருந்திருப்பார்கள். இந்த எண்ணத்தோடு தான், அதிக ஆள் சேதமில்லாது ருஷ்யாவில் பல இடங்களை நாஜிகள் காலி செய்து விட்டு வெளியேறி யிருக்க வேண்டும்.

ஆனால் சென்ற வாரம், மாஸ்கோவில் முடிந்த மூவல்லரசுகள் மகாநாடும், அதைத் தொடர்ந்து துருக்கியிலும், கெயிரோ நகரிலும் நடக்கும் ரகசியப் பேச்சுக்களும், அப்பால், சென்ற சனிக்கிழமை, ருஷ்யப் புரட்சியின் இருபத்தாறுவது வருஷாப்தீக தினத்திலே மார்ஷல் ஸ்டாலின் பேசிய பேச்சும், ஹிட்லரையும், அவரைச் சேர்ந்தவர்களையும் அப்படியே இடிந்து போய், கல்போல உட்கார வைத்திருக்கும் என்று நாம் எண்ணினால், அது ஒன்றும் வீண் கற்பனை ஆகி விடாது.

ஜப்பானியருக்கு இனி ஓய்வில்லை

ஹிட்லருக்கும், ஜெர்மானியருக்கும், அவர்களோடு கைகோர்த்துக் கொண்டு, ஆனால் அவர்களுக்குத் தம்பிடி கூடப் பிரயோசனமில்லாதிருக்கும் ஜப்பானியருக்கும், அவர்களது தலைவரான டோஜோவிற்கும் இனி, என்றும் ஓய்வு மிருக்கப் போவது மில்லை; ஒழிவு மிருக்கப் போவதில்லை. ஒரே உபத்திரவமாகத்தானிருக்கப் போகிறது.

அவர்கள் மரியாதையாக நிபந்தனையின்றி சரணடையும் வரை அவர்களை அடித்து நொறுக்குவது என்று ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் தீர்மானித்திருக்கின்றன. ஆனால், நாமோ இனி ஜெயிக்கப் போவதில்லை. ஜெயம் என்ற வார்த்தையே நமது அகராதியை விட்டு, எப்படியோ நழுவிப் போய் நேசதேசத்தார் அகராதிக்குள் புகுந்து கொண்டு விட்டது; அதனால், இன்னும் எவ்வளவு காலம் சாத்தியமோ, அவ்வளவு காலம் இந்த யுத்தத்தை இழுத்தடிக்கலாமே! நமக்கு ஆள் சேதம் ஆனாலும் ஆகட்டும். "பத்தோடு பதினொன்று, அத்தோடே இது ஒன்று"! ஆனால், நேசதேசத்தார் நல்ல கஷ்ட நஷ்டத்தோடேயே இறுதி வெற்றியைக் கட்டிக்கொண்டு போகட்டும் என்று ஹிட்லர் நினைக்கக்கூடு மல்லவா?

இப்பொழுது, அவரது படைகள் எல்லா இடங்களிலும் பாதுகாப்பு யுத்தத்தைத் தானே நடத்திக் கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம், முன்னேறுவதும், போகு மிடங்களில் எல்லாம் ரஸ்தாக்கள், பாலங்கள் ஆகியவற்றைப் போடுவதுமே, நாஜிப் படைகளுக்கு வேலையாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ, எங்கு பார்த்தாலும், நாஜிப் படைகள் தங்களுக்குப் பின்னால் உள்ள ரஸ்தாக்கள் ஒழுங்காக இருக்கின்றனவா என்ற நினைப்போடே போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்கே இருப்பவற்றை யெல்லாம் தங்களுடைய படைகள் பின் வாங்கிய பிறகு, வெடி வைத்துப் பாழாக்கிக் கொண்டு போவதே அவர்களில் ஒரு பகுதியினருக்கு சரியான வேலையாக இருக்கிறது. அவர்கள் திரும்பி ஓடும்போது, இன்னும் என்னென்ன அக்ரமங்களைச் செய்து போகிறார்கள் தெரியுமா? பல அழகான நகரங்களை அக்கினிக்கும், சுரங்க வெடிகளுக்கும் குறியாக்கி விட்டுச் செல்லுகிறார்கள். யுத்தம் முடிந்த பிறகு ருஷ்யர்களுக்குப் புனருத்தாரண வேலைகள் பல வருஷக் கணக்கில் நீடித்திருக்கப் போகின்றன என்பது இப்பொழுதே தெரிகிறது.

நாசிகள் நாசக்காரர்கள்

நாஜிகள் நாசக்காரர்கள் என்பது சரித்திரப் பிரசித்த மாகிவிடப் போகிறது. அதோடு, ஒரு பித்தரைத் தலைவராகக் கொண்டு, தன் சொந்த மூளைகளை உபயோகின்றது. கண் மூடித்தனமாக, அந்தத் தலைவர் இழுத்துக் கொண்டு போகிற பாதைகளில் எல்லாம், வண்டிக்காரன் மூக்கணாங்கயிற்றை இழுத்த வழி யெல்லாம் செல்லும் மாடுகள் போலப் போவதனால் உண்டான பலன் என்ன என்பதை, உலக மாந்தர் நன்கு தெரிந்து கொண்டிருப்பார்கள்.

இந்த உண்மை இப்பொழுது தான் நாஜிகளில் பலரிடை உதயமாகி வருகிறாப் போல் காண்கிறது. பிரான்ஸிலே இருக்கிறார் ஒரு அநுபவ முதிர்ந்த சேனைத் தலைவர். அவர் ஹிட்லருக்கு ஒரு கடித மெழுதி யிருப்பதாகக் கூறுகிறார்கள்.

ஹிட்லர் ராஜிநாமா செய்ய வேண்டும்

ஐயா! ஹிட்லரே! ஏனின்னும் உமக்கு இந்தப் பிடிவாதம்? இவ்வளவு நாள் உமது இஷ்டப்படியே நாங்கள் எல்லாம் நடந்து பார்த்தாயிற்றே! நாங்கள் அடைந்த பலன் ஒன்றும் சுகமில்லை. இனி ஜெர்மனி ஜெயிப்பது என்பது கனவிலு மில்லை. ஆகையால், நீரே புத்திசாலித் தனமாக, உமது பதவியை ராஜிநாமா செய்து விட்டு, ராஜ்ய பாரத்தை மற்ற ராணுவத் தலைவர்களிடம் ஒப்படையும். சண்டையைச் சீக்கிரம் முடித்து, ஏதாவது ஒரு சமாதானம் என்று அவர்களாவது செய்து முடித்து, ஜெர்மன் மக்களுக்குக் கொஞ்சம் ஓய்ச்சலும், ஒழிவும், தூங்க வசதியும் ஏற்பட வழி செய்வார்களே! என்று அதிலே அவர் குறிப்பிட்டிருக்கிறாராம். ரொம்ப நல்ல யோசனை. போகிறதோ போகிறோம், புளிய மரத்தையும் சாய்த்து விட்டுப் போகலாம் என்று எண்ணும் பிசாசைப் போல், ஹிட்லர் எண்ணக் கூடும். புளிய மரம் போனால் புளி கிடைப்பது போய் விடுமே! அப்புறம் அதை எதிர் பார்த்திருப்பவர்களுக்கு ரொம்பக் கஷ்டந் தானே? அதே போல், ஹிட்லர் முரட்டுத் தனமாக, விரக்தியின்பேரில், இல்லை, ஒரு ஆத்திரத்தின் பேரில் செய்து செல்லும் காரியங்களின் பலனை, ஜெர்மானியர் தானே அனுபவிக்க வேண்டும். ஆகவே ஜெர்மானியர்கள் கூடிய சீக்கிரமே உணர்வு பெற்று, செய்ய வேண்டியது என்ன என்பதைத் தெரிந்து கொள்ளுவார்கள் என நினைக்கிறோம்.

மாஸ்கோ, ஜெர்மனியின் ஜாதகத்தைக் கணித்தது

மாஸ்கோ மகா நாட்டில் ஏற்பட்ட முடிவுகள் ஜெர்மனியின் எதிர்கால ஜாதகத்தைக் கூட கணித்துவிட்டது. முதலிலே, ஜெர்மனியின் பிடியில் சிக்கியுள்ள ஆஸ்திரியாவை ஹிட்லரிடமிருந்து பிடுங்கி, அதற்குச் சுதந்திரமளிப்பது என்று தீர்மானித்திருக்கிறார்கள்.

ஆகவே, இத்தாலியப் போர் முடிந்ததும், அடுத்தாப் போல் உள்ள ஆஸ்திரியாவை நேச தேசத்தார் தாக்கப் போகிறார்கள் என்பதும், இத்தாலியப் போர் தங்களுக்குச் சாதகமாகவே முடியும் என்று அவர்கள் சந்தேகமற நினைக்கிறார்கள் என்பதும் வெளியாகின்றதல்லவா?

இடிமேலிடி விழுவது போலவே தவிக்கிறார்கள் நாஜிகள். நாஜித் தலைவர்கள் அடிக்கடி ஒன்று கூடுகிறார்கள். திகிலோடு ஆஸ்திரியாவில் உள் நாட்டுக் கிளர்ச்சிகள் எரிமலைகள் போலக் கிளம்புமோ என்றெண்ணி நடுங்குகிறார்கள். அவசர அவசரமாக வியன்னா நகருக்கும், மற்ற முக்ய நகரங்களுக்கும் முரட்டு நாஜி போலீஸ்காரர்களை அனுப்புகிறார்கள். ஆஸ்திரிய நகரங்களில் உள்ள போலீஸ்காரர்களை வேலையிலிருந்து தள்ளிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக, நாஜி போலீஸ்காரர்களை வைக்கவும் உத்திரவு போட்டிருக்கிறார்களாம்.

ரஷ்ய-செக் ஒப்பந்தம்

செக்கோஸ்லோவகியா தேசத்துத் தலைவரான டாக்டர் பினேஷ், ருஷ்யாவோடு இருபது வருஷகால கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டு, ஜெர்மனிக்கு எதிராகக் காரியங்கள் நடத்துவதென்று முடிவு செய்துவிட்டு, மாஸ்கோ நகருக்கு நேருக்கு நேரில் சென்று, ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடப் போகிறாராம்.

துருக்கியில் நடக்கும் பேச்சுக்களைப் பார்த்தால், அதுவும் ஒரு வேளை பகிரங்கமாக ஹிட்லருககு விரோதமாக நேச தேசத்தவர்களுடன் சேர்ந்து கொண்டு போர் தொடுக்குமோ என்று தோன்றுகிறது. அது அவ்வாறு செய்யுமானால், ஹிட்லரின் முடிவு காலம் அதி சீக்கிரமே நெருங்கிவிடும் என்பதில் சந்தேகமே யில்லை. கருங்கடலுக்குப் போகும் கால் பாதை துருக்கியின் ஆதீனத்திலிருக்கிறது. இப்பொழுது நேச தேசத்தவரின் கை ஓங்கியுள்ள மத்யதரைக் கடலிலிருந்து கருங்கடலுக்கு இப்பாதை வழியாகத் தான் செல்லவேண்டும். துருக்கி நடு நிலைமை நாடாகவே இருந்தால், இந்தப் பாதையை யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் தாராளமாக உபயோகிக்க முடியாது. ஆனால் நாளாக ஆக, ஜெர்மானியர் ருஷ்யாவில் பின்வாங்கப் பின்வாங்க, இந்த டார்டனல்ஸ் ஜலசந்தியைத் தங்கள் உபயோகத்திற்கு விடும்படி நேச நாடுகள் துருக்கியைக் கேட்கக் கூடும். போர்ச்சுகல் தேசம் எப்படி அஸோர்ஸ் தீவை நேச தேசத்தாரின் உபயோகத்திற்குக் கொடுத்து, நல்ல பெயர் வாங்கிக்கொண்டதோ, அம்மாதிரி துருக்கியும் செய்ய வேண்டி வரலாம். ஆனால் போர்ச்சுகல் மீது சட்டென்று பாய ஹிட்லருக்கு சௌகரியம் இல்லாதிருந்தது. இப்பொழுது துருக்கியின் தலை நகரான இஸ்தான் புல்லோ, பல்கேரியாவிற்கு அருகேயே இருக்கிறது. ஆகவே, ஹிட்லர் ஏதாவது சேஷ்டைகள் செய்யலாம். அவர் இவ்வளவு காலமாகச் செய்திராத புதுக் காரியம் என்ன செய்யப் போகிறார் இனி மேலே. அவர் எது செய்தாலும் எல்லாம் கணக்கில் எழுதிக் கொண்டு, வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுப்பது என்று தான் நேச தேசத்தார் தீர்மானித்திருக்கிறார்களே!

ஜெர்மனியில் மூடு நகரங்கள்

நேச தேச விமானிகள் போடுகிற போடு எத்தகைய தென்பது இப்பொழுது நன்றாகத் தெரிந்துவிட்டது. அவர்கள் குண்டு வீச்சிற்குக் குறியான நகர்களில், பெர்லின், வியன்னா, டஸ்ஸெலா, டல்ஸல்டார்ப், ஹாம்பர்க், மற்றும் கிழக்கு ஜெர்மனியிலே உள்ள நகரங்கள் எல்லாம் இருக்கின்றன. இந்த நகரங்கள் எல்லாம் இப்பொழுது மூடு நகரங்கள் என அறிவிக்கப்பட்டுவிட்டன. இவற்றினுள்ளே, இனி யார் போக விரும்பினாலும், விசேஷ அநுமதிச் சீட்டு வேண்டுமாம்.

ஐயோ! அவ்வளவு பாழாகவா போய்விட்டன அந்த நகரங்கள் எல்லாம்? அந்தக் கண்ணருவிக் காட்சியை யாரும் பார்க்கப்படாது; பார்த்து வெளியிலே சொல்லப்படாது என்று இம்மாதிரி செய்து விட்டார்களா?

இத்தனை நகரங்களுக்கு ஏக காலத்தில் ஜெர்மானிய அரசாங்கம் கம்பளி போட்டு மூடி வைத்திருப்பது, நேச தேச விமானிகளுக்கு ஒரு நல்ல பெயர் தான். இதை யெல்லாம் மாஸ்கோ மகா நாட்டில் பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதிநிதிகள் அழகாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். அதனால் தான், ஸ்டாலின், ருஷ்யப் புரட்சி தினத்திலே பேசுகையில், 'நேச தேச விமானிகள் கட்டுப்பாடாக ஜெர்மன் தொழிற்சாலை நகரங்களைத் தகர்ப்பதும், ஒரு விதத்தில் இரண்டாவது போர் முனையை ஆரம்பித்தது போலத் தான்!' என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இரண்டாம் போர் முனை

'மேற்குத் திசையில் நேச தேசப் படைகள் இறங்கினால் அல்லாது, ஸிஸிலி இத்தாலிப் போர்களை எல்லாம் இரண்டாவது போர் முனையாக தாங்கள் கருதுவதற்கில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள் ருஷ்யர்கள். அவர்களுக்கு, மேற்கு ஜெர்மனியில் சாம்பலானவை என்னென்ன என்ற முழு விவரம் தெரியாது போலிருக்கு! இப்பொழுது விஷயமறிந்த பின் ஸ்டாலின் நன்றாகப் பேசியிருக்கிறார். அதோடு, ருஷ்ய வெற்றிகளுக்கு, நேச தேசத்தார் வட ஆபிரிகாவிலும், ஸிஸிலியிலும், இத்தாலியிலும் அடைந்த ஜெயங்கள் பெரிதும் உதவியிருக்கின்றன என்றும் ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார். "தனி மரம் காடாகுமா?"

ருஷ்யர்கள் வீரம், சரித்திரப் பிரசித்தம்

ருஷ்யர்கள் காட்டிய, காட்டிவரும் வீரம், சரித்திரப் பிரசித்தமாகப் போகிறது என்பதில் சந்தேகமேயில்லை. யுத்தம் நடத்துவது என்றால், அவர்களிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவார்கள் போலிருக்கிறது எதிர்கால சரித்திராசிரியர்கள்.

ஜெர்மனி, ருஷ்யாமீது பாய்ந்தபோது, எங்கு பார்த்தாலும், இரண்டாயிரம் மைல் நீளமுள்ள போர்முனை முழுவதும், ஜெர்மானியர் முன்னேறிய வண்ணமாகவே இருந்தார்கள். ஸ்டாலின்கிராட் வரை ஒரு புறமும், மாஸ்கோ வரை மற்றொரு புறமும் முன்னேறி யூக்ரேனிலே முழுவதையும், காகஸிலே பெரும் பகுதியையும் கைப்பற்றினார்கள்.

அப்பொழுதெல்லாம், ருஷ்யர்கள் பின்வாங்கத்தான் செய்தார்கள், இப்பொழுது ஜெர்மானியர் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டும் பின்வாங்குதல் வியாபாரங்கள் தான். ஆனால் இரண்டிற்கும் ஏக வித்யாசங்கள்.

இரண்டு பின் வாங்குதலுக்கும் உள்ள வேற்றுமைகள்

யுத்த ஆரம்பத்தில் நாஸி ரேடியோக்கள் வெளியிட்ட செய்திகளைக் கவனித்தால், 'இந்த ஊர் கிடைத்தது. அந்த ஊரைப் பிடித்தோம். இவ்வளவு சதுர மைல்கள் எங்கள் வசப்பட்டன. இந்த ஆற்றைக் கடந்தோம். அந்த ஊருக்குள் புகுந்தோம்' என்றுதானிருக்குமே தவிர, ருஷ்யர்கள் ஏராளமாகக் கைது செய்யப்பட்டார்கள் என்றோ, ஆயுதங்களும், யுத்தத் தளவாடங்களும், வெடி மருந்துகளும், உணவுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்றோ, செய்திகள் வந்ததே கிடையாது. அது எதைக் காட்டுகிறது? ருஷ்யர்கள் எவ்வளவு கட்டுப்பாடாக, தாங்களே எதையும் விட்டுப்போகாது, பின் வாங்கிக் கொண்டிருந்தார்கள் என்பது தெரிகிறது.

ஆனால், நிதம் விடிந்தால் இப்பொழுது பத்திரிகைகளைப் பிரித்தால், 'குப்பை குப்பையாக உணவுப் பொருளகளும், பீரங்கிகளும், வெடி மருந்துகளும், லாரிகளும் கைப்பற்றப்பட்டன. பல புதுத் தொழிற்சாலைகள் சேதப்படாமலிருந்தன. லக்ஷக்கணக்கிலே ஜெர்மானியர் கைது செய்யப்படுகிறார்கள்' என்ற செய்திகளே நிறைய இருக்கின்றன.

ரஷ்யர்களுக்கு இரட்டைச் சாதகம்

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஜெர்மானியரிடை உள்ள கட்டுப்பாடு குலைந்துவிட்டது. ருஷ்யர்களின் பாயும் வேகம், மனோ வேகத்தையும் மிஞ்சி வருகிறது. ஆகவே, ஒழுங்காக எந்தக் காரியத்தையும் செய்ய ஜெர்மானியருக்கு ஓய்வுமில்லை, ஒழிவுமில்லை. சாமான்களைக் காப்பதற்குத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தால், பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்கைப்\ போலாகி விடவேண்டும் போலிருக்கிறது ஜெர்மன் வீரர்களது நிலைமை. ஆகவே தலை பிழைத்தால் தம்பிரான் புண்ணியம் என்று அவர்கள் ஓடவேண்டி வந்துவிடுகிறது. அதனால் ருஷ்யர்களுக்கு, இழந்த இடங்கள் மீட்கப்படும் பாக்யம் ஏற்படுவதோடு, ஏராளமான சாமான்களும் சிரமமின்றிக் கிடைக்கின்றன.

சென்ற நாலு மாதங்களில், ருஷ்யர்கள் மூன்றரை லக்ஷம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள பிரதேசங்களை ஜெர்மானியரிடமிருந்து மீட்டிருக்கிறார்கள். நூற்றொன்பதிலிருந்து 270 மைல்கள் வரை முன்னேறியிருக்கிறார்கள். முப்பத்தெட்டாயிரம் ஊர்கள் ருஷ்யர்கள் வசம் வந்திருக்கின்றன். அவற்றுள் 182 பெரிய நகரங்களும் இருக்கின்றன. இத்தனை காலத்திற்குள் ஒன்பது லக்ஷம் ஜெர்மானியர் எமனுலகு சேர்ந்திருக்கிறார்கள். இதுவரை ஜெர்மனிக்கு மொத்தம் இருபத்தேழு லக்ஷம் பேர்கள் நஷ்டமாம். இதையெல்லாம் ஸ்டாலினும், ருஷ்ய ரேடியோவும் கூறினதைக் கேட்டதும், கொப்பல்ஸ் துரை சும்மா இருப்பாரா?

ஜெர்மனிக்கு இது நெருக்கடியான காலம்

அவாளுக்கு மட்டுமென்ன வாழ்ந்தது? அவாளுக்கு முப்பது லக்ஷம் நஷ்டம் என்றார் அவர். ஒரு மூன்று லக்ஷத்தை வாயளவில் காட்டுவதால் அவருக்கு, அவரது பேச்சைக் கேட்கும் ஜெர்மானியருக்கும் உத்சாகமுண்டாகுமானால், அதை யாரும் தடுக்கப் போவதில்லை. புளுகுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டவர்கள், எப்பொழுதாவது உண்மை பேசினால் தானே நாம் ஆச்சரியப்படவேண்டும்? ஆனால், 'ஜெர்மனிக்கு இது நெருக்கடியான காலம், ஜெர்மனியின் பெருமையைக் காக்க இன்னும் பல தியாகங்கள் செய்யவேண்டும்' என இப்பொழுது தான் ஜெர்மன் தலைவர்கள் சொல்லுகிறார்கள். மியூனிச்சிலே, பழுத்த கிழங்களைக் கூட்டிவைத்துக் கொண்டு ஹிட்லர் பேசினாராம். 'ஜெர்மன் அரசாங்கத்தை அசைக்கமுடியாத அரசாங்கமாக்க வேண்டும், ஜெயம் பெற்று வாழவேண்டும் நாம், த்ரோகிகள் யாரையும் தலைதூக்கவிடக் கூடாது' என்று சொன்னாராம் அவர். 'எங்கப்பா குதிருக்குள்ளே இல்லே!' என்ற கதையாக இருக்கிறதே இது! ஜெர்மன் அரசாங்கத்துக்கு ஏதோ ஆட்டம் கண்டிருக்கிறது. யாரோ சமாதானப்பிரியர்கள் தலைதூக்கப் பார்க்கிறார்கள் ஜெர்மனியிலே என்று நினைக்கலாம் போலிருக்கிறது, ஹிட்லர் பேச்சைப் பார்த்தால்.

எத்தனை காலந்தான் திணறிக் கொண்டிருப்பது

ஆமாமய்யா! எத்தனை காலம் தான் ஜெர்மன் மக்களும், ஹிட்லரின் கொடுங்கோன்மைக்கு ஆளான இதர ஐரோப்பிய நாட்டுமக்களும் திணறிக் கொண்டிருப்பது? அவரவர்கள் மீட்சிக் காலத்தை சீக்கிரமே எதிர்பார்க்க மாட்டார்களா? எல்லோரும் ஏககாலத்தில் இவ்வாறு எண்ணும்பொழுது, எந்தத் தனி மனிதனும், தனி அரசாங்கமும் தான் தள்ளாடாது நிலைத்து நிற்கமுடியும்?

ருஷ்யாவிலே, ருஷ்ய பீரங்கிப் படைகளும், டாங்கிப் படைகளும், குதிரைப் படைகளும் நாலாபுறமும் பாய்ந்து, அடுத்தாப்போல் எங்கு வருவார்கள் அவர்கள் என்பதை எண்ணியே நாஜிகள் கலங்கும்படி அடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யூக்ரேனின் தலைநகரும், ருஷ்ய நகரங்களுக்கு மாதா எனக் கருதப்பட்டு வந்ததுமான கியெப் நகரத்தை, பெரிய யுத்தம் ஏதுமின்றி ருஷ்யர்கள் கைப்பற்றிவிட்டார்கள் என்ற செய்தி, எல்லோரையும் ¡ பிரமிக்க வைத்திருக்கும்.

கியெப் கைப்பற்றப்பட்டது

ருஷ்யா எங்கும் புரட்சியின் இருபத்தாறுவது ஆண்டு விழாவைக் கொண்டாடப் போகிறார்கள்; அன்றைய தினத்திற்கு நமது மா பெருந் தலைவரான வீரர் ஸ்டாலினுக்கு உள்ளம் பூரிக்கத் தக்க செய்தியாக ஒன்று அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடேயே, ருஷ்யர்கள் கியெபை, வெகு தூரத்திற் கப்பாலேயே வளைத்துக் கொண்டு முன்னேறப் பார்த்தார்கள் போலிருக்கிறது. எக்கச்சக்கமாக மாட்டிக்கொண்டு விட்டோம் என்பதை உணர்ந்த நாஜிகள் அவசர அவசரமாக கியெப் நகரத்திற்குத் தீ மூட்டிவிட்டு ஓடிவிட்டார்களாம். பெரிய யுத்தம் நடந்து ஆள் சேதமாகாவிட்டாலும், அழகிய கியெப் நகரத்திலே சேதம் அதிகம் தானாம். ஜல டாங்கியை நாஜிகள் உடைத்துவிட்டார்கள். ஆகவே டினீப்பர் நதியிலிருந்துதான், வாளிவாளியாக ஜலம் எடுத்து வந்து, வீசி எரியும் நெருப்பை அணைக்க வேண்டியிருக்கிறதாம்.

கியெப் நகரை ஜெர்மானியர் விட்டுவிட்டதால், அவர்களுக்குப் பெரிய கஷ்டங்கள் பல தொடர்ந்து வரவிருக்கின்றன. முதல் கஷ்டம் போக்குவரத்துக் கஷ்டம். இங்கிருந்து போலந்து எல்லை வெகு தூரத்தில் இல்லை. ஏற்கெனவேயே ருஷ்யர்கள் நாற்பது மைல்கள் கியெபிற்கு தென்மேற்கே முன்னேறி விட்டார்களாம்.

'அயோக்கிய ஜெர்மானியரை நமது மண்ணிலிருந்தே துப்புரவாக விரட்டி ஓட்டும் நாள் சமீபித்து விட்டது. இனி யுத்தம் வெகு கடுமையாகவே இருக்கும்' என்று ஸ்டாலின் கூறிவிட்டார்.

கிரிமியாவில் கடும்போர் நடக்கிறது. அங்குள்ள கெர்ச் எனும் ஊரைத் தாக்க ருஷ்யர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். வானிலும், தரையிலும் அவர்கள் கொண்டுள்ள பலம் நாஜிகளின் பலத்தை சூரியன் முன் மின்சார விளக்குப் போலாக்கியிருக்கிறது.

ருஷ்யப் பெண்களின் வீரம்

வீர ருஷ்யப் பெண்மணிகள் இப்பொழுது ஏராளமாக யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டு வருகிறார்களாம். அவர்களில் பலர் பாரசூட் மூலம் ஜெர்மானியருக்குப் பின்னால் இறக்கப்படுகிறார்களாம். அவர்கள் கொரில்லாப் படைகளைச் சேகரித்து, ஜெர்மானியருக்குத் தொல்லை விளைவிக்கிறார்களாம். அவர்களின் தேசபக்தியையும், நெஞ்சழுத்தத்தையும் குறித்து நம் வீட்டுப் பாட்டிமார்கள் கேட்டால், மூக்கு மீது தான் கை வைப்பார்கள்.

இத்தாலியிலே, நேசதேசப் படைகளுக்கு ஏக இடைஞ்சல்கள். மழை ஒரு பக்கம் உபத்திரவப்படுத்துகிறது. சும்மா இருக்கிற நம்மையே இந்த மழை அழ வைக்கிறதே, யுத்தகளத்தில, திறந்த வெளிகளில் இருப்பவர்களை என்ன பாடுபடுத்தும் என்று பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆனாலும், நேசதேசப் படைகள், தளரா மனத்துடன் தங்கள் முன்னேற்றத்திற்குத் தடங்கல் ஏற்படாமலே பார்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆறுகள், மலைகள், பள்ளத் தாக்குகள், சமவெளிகள் எல்லாம் கடந்து, ரோமாபுரி மீது கண்ணுகப் போய்க்கொண்டிருக்கிறார்கள் நம்மவர்கள். ஜெர்மன் படைகளும் லேசில் விட்டுக் கொடுப்ப தில்லையாம். எட்டாம் சேனையுடன் செல்லும் நமது இந்தியப் படைகளும், பல சந்தர்ப்பங்களில் சாகச காரியங்களைச் செய்து கொண்டுதானிருக்கிறார்களாம். ஹிட்லர் இன்னும் ஏகப்பட்ட வீரர்களை இத்தாலில் கொணர்ந்து குவித்துக் கொண்டிருக்கிறாராம். இனி எவ்வளவு படை வந்தால் தான் என்ன? வெள்ளம் பொங்கி வருகிறது. எத்தனை வண்டி மண்ணை கொட்டினால் தான் என்ன பிரயோசனம்?

ஒரு வருஷத்தில் பெரும் மாறுதல்கள்

சென்ற ஒரு வருஷத்திற்குள் எவ்வளவோ பிரமாதமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடல் கடந்து எங்கு வேண்டுமானாலும் போயிறங்கிப் போர்புரிய, வேண்டிய வசதிகள் செய்துகொண்டு விட்டோம். யுத்தம் என்றால் குஷியாகக் கிளம்பும் மனோபாவம் நமது படைகளுக்கு உண்டு. ஐக்கிய நாடுகளின் படைகளுக்கு ஒரே தலைவர் என்ற முறை புகைச்சலின்றி வேலை செய்து வருகிறதைக் கண்டுவிட்டோம். கடற்படை, தரைப்படை, விமானப்படை இம்மூன்றிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையும் பரஸ்பரம் உதவும் சக்தியும் அபாரமாக வளர்ந்து விட்டது. ஐரோப்பிய மக்களை விடுவித்து, அவர்களுக் கெல்லாம் சுதந்திரம் அளித்து விடுவதென்ற முடிவுக்கு நேச நாடுகள் வந்து விட்டன. அதற்காக, ஒரு தனிச் சங்கத்தை ஏற்படுத்தவும் முடிவு செய்துவிட்டார்கள். இனி, வெற்றி நிச்சயம் தான். ஆனால் மார்ஷல் ஸ்டாலின் கூறியது போல் வெற்றி எளிதில் வராது. போராடிக்கொண்டே தான் வரும் அது.

ருஷ்யர்கள் சென்ற ஒரு வருஷத்தில் புரிந்த செயல்களிலிருந்து இன்னொரு புது விஷயமும் உலகத்திற்கும், முக்கியமாக நாஜிகளுக்கும் புரிந்திருக்கும். ருஷ்யர்கள் மாரி காலத்தில் தான் கொட்டமடிப்பார்கள்; கோடையில் பதுங்கி ஓடுவார்கள் என்றிருந்த பேச்சை, ருஷ்யர்கள் மாறச் செய்து விட்டார்கள். எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் பாய்வோம் என்பதை நிருபித்துவிட்டார்கள். இம்மாதிரியான பெருமையை ருஷ்யாவிற்குச் சம்பாதித்துக் கொடுத்தவர், ருஷ்ய பொது சேனாபதி ஸ்டாலின் துரை தான். அவருக்கு ருஷ்யாவிலேயே மிக உயர்ந்த பட்டம் ஒன்றைக் கொடுத்து, ருஷ்ய அரசாங்கத்தார் கௌரவித்திருக்கிறார்கள். ஜெர்மனி தவிர, மற்ற நாட்டினரெல்லாம் இந்த விழாவிற்கு முக்யத்வமளித்திருக்கிறார்கள். ஜெர்மனிக்குத் தான் ருஷ்யா என்றாலே, சாய வேஷ்டியைக் கண்ட காளை மாடு போலிருக்கே!

ஓய்வு ஒழிவின்றி ஜப்பானியர் தாக்கப்படுகின்றனர்

ஐரோப்பிய நிலைமை இப்படியிருக்க, ஜப்பானியரையும் ஓய்வு ஒழிவு இல்லாது நேச தேசத்தார் தென் மேற்கு பசிபிக்கில் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ரபால் என்ற துறைமுகத்தில் தூங்கிக் கிடக்கும் ஜப்பானியக் கப்பற் படையை அவ்வப்போது தாக்கி, சேதப்படுத்தி வருகிறார்கள். போகன்வில்லா தீவில் இறக்கிய நேசப் படைகளை எதிர்க்க வந்த ஜப்பானிய கடற் படை, அடிபட்டு ஓடிவிட்டது. ஒரு புறம் போகன் வில்லா, மறுபுறம் பின்ஷாபன், இப்படியாக இடுக்கி போல் கிளம்பி, நியூ பிரிட்டன் தீவை நசுக்க திட்டம் போட்டிருக்கிறாராம் ஜெனரல் மெக் ஆர்தர்.

இந்தியாவிலிருந்து பல விமானிகள் பர்மாவில் பல இலக்குகளைத் தகர்த்து வருகிறார்கள், மவுண்ட் பாட்டன் பிரபு பெரிய 'பிளான்கள்' போட்டிருக்கிறார். அதை அறிய ஜப்பானியர் வெகு ஆவலாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமா?

"அமைதியும் ஆக்ரமிப்பு இன்மையும் நம் நோக்கங்கள்"

நேசநாடுகளைப் பிரிக்க, கொப்பல்ஸ் முயற்சி பலிக்கவில்லை

சென்னை வானொலி நிலையத்திலிருந்து ராவ் சாஹிப் டி. எஸ். நடராஜ பிள்ளையவர்கள் சென்ற 1943-ம் ஆண்டு நவம்பர்மீ 3உ "அச்சுப் பிரசாரம்" என்பது பற்றி ஒலி பெருக்கிய சொற்பொழிவு வருமாறு:—

இப்போது ஒரு சிறு கதை சொல்லப் போகிறேன். அது பஞ்ச தந்திரத்தில் உள்ள கதை. ஒரு காட்டில் நான்கு எருதுகள், மிகவும் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தன. அவை எங்குச் சென்றாலும் இணைபிரியாது செல்வது வழக்கம். இவை மிகவும் வலுவுள்ளவையாய் இருந்தபடியால், இவற்றை எதிர்ப்பதற்கு எந்த விலங்காலும் முடியவில்லை. ஒரு சிங்கம் இவைகளைக் கொன்று தின்ன ஆசைப்பட்டது. ஆனால் ஒன்றை இடிக்கப் போகுமுன், மற்றைய மூன்றும் சிங்கத்தின் மேல் பாயும். இதனால் சிங்கத்தின் எண்ணம் ஈடேறவில்லை. ஒரு நாள் சிங்கத்தினிடத்தில் ஒரு நரி வந்து, அதன் வாடிய முகத்தைக் கண்டு, அதன் காரணத்தைத் தெளிந்து கொண்டது. தான் சிங்கத்தை மகிழ்விப்பதாய் வாக்களித்தது. ஒவ்வொரு எருதினிடமும் தனித்தனியாகச் சென்று, ஒன்று மற்றொன்றை வைததாகவும், எளனம் செய்ததாகவும் சொல்லவே, அவைகளுக்குள் இருந்த நட்பு மாறி, பகைமை உண்டாயிற்று. ஒன்று மேய்ந்த இடத்தை மற்றொன்று நாடுவதில்லை. "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்று அவை எண்ணின. சிங்கம் எதிர்பார்த்தது இது தான். துணையற்று நின்ற காளைகள் துணிவடைந்தன. ஒவ்வொன்றாய், நான்கும் இறக்க நேர்ந்தது.

கொப்பல்ஸ் தந்திரம் பலிக்கவில்லை

அச்சு நாட்டார் (நான்கு பேர்) இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷ்யா, சைனக்காரர். இவர்களுடைய ஒற்றுமை ஜெர்மனிக்கு பெரிய இடர்ப்பாட்டை உண்டாக்குகிறது. ஜெர்மனி வெற்றியடைய வேண்டுமானால், இவர்களுடைய ஒற்றுமை குலைய வேண்டும். இதற்கு என்ன செய்ய வேண்டும்? இவர்களுக்குள் வேற்றுமையையும், அவநம்பிக்கையையும் உண்டாக்க வேண்டும், இதைச் செய்ய கொப்பல்ஸ் புறப்பட்டார். நரி செய்த சூழ்ச்சியைத் தான் ரேடியோ மூலம் செய்யத் தொடங்கி இருக்கிறார். அப்படிச் செய்யச் சமயமும் இதுதான். மாஸ்கோவில் பிரிட்டிஷ்காரரும், அமெரிக்கரும் ருஷ்யரோடு கலந்து யோசனை செய்கிறார்கள். அவர்களுக்குள் உள்ள மாறுபாடுகளையெல்லாம் ஒழித்து தற்காலத்திலும், பிற்காலத்திலும், ஒற்றுமையாக, ஒரே மனதாய்ச் சண்டையை நடத்தி, சமாதானத்தையும் நடத்த வேண்டுமென்று அவர்கள் பாடுபடுகிறார்கள்.

ஆளுக்குத் தகுந்த வேஷம்

இதை மாற்ற வேண்டியது முக்கியம் ஆகவே, கொப்பல்ஸ் என்ன செய்கிறார்? அமெரிக்கருக்கும் ஆங்கிலேயருக்கும் ஒரு நற்புத்தி சொல்லுகிறார். "ருஷ்யாவின் எண்ணம் இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? ஐரோப்பாக் கண்டத்தைத் தன் ஆளுகைக் கீழ் அடக்க வேண்டுமென்பது ஒன்று. அங்கிருக்கும் மக்களை எல்லாம் தனக்கு அடிமையாக்க வேண்டுமென்பது மற்றொன்று. போல்ஷிவிக் அரசு உலகெங்கும் பரவும். ஒருவன் பாடுபட்டுச் சேகரித்த சொத்து அவனுக்கு உதவாது. பொதுவுடமை எங்கும் பரவப் போகிறது" என்கிறார் ஒரு புறம். மறுபுறம் ருஷ்யருக்கு என்ன சொல்லுகிறார்? "இது வரையில் ஜெர்மானியருடன் வீராவேசத்துடன் போர் புரிந்தவர் நீங்கள் தான். நீங்கள் சண்டையை விட்டு விலகிவிட்டால், பிரிடிஷாரும், அமெரிக்கர்களும் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் உங்களைப் பிடித்து வைத்து, உங்கள் பேரிலேயே எல்லாப் பாரத்தையும் சுமத்தி, உங்களைக் கொல்விக்க வேண்டுமென்று அவர்கள் பாடுபடுகிறார்கள். இதனால் நீங்கள் எங்களுடன் தனிச் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். எல்லாம் நன்மையாகும்," என்கிறார்.

ஜப்பான் குள்ளநரித் தந்திரம்

அதே போல், ஜப்பானும் சைனாவிடம் தனி உடன்படிக்கை செய்து கொள்ள முயலுகிறது. அஜாத் ஹிந்த் என்னும் ஜெர்மன் ரேடியோ மூலம் ஹிந்துஸ்தானியில் (கொப்பல்ஸ்) சொல்வதாவது:—"மாஸ்கோவிலிருந்து ருஷ்யர் சொல்கிறபடி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கேட்கவேண்டியது தான் என்று லண்டனிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும் சர்ச்சில் செய்யும் தந்திரங்கள் கூட ஸ்டாலினால் நியமிக்கப்பட்டவை தான்" என்கிறார். இந்தப் பிரசாரத்தினால் ஜெர்மானியருடைய உள்ளெண்ணம் இன்னதென்று தெரியவரும். முதலாவதாக ருஷ்யர் ஊரையெல்லாம் பிடித்துக் கொள்ளப் போகிறார்கள் என்றால், ஜெர்மானியரே அஞ்சி, ருஷ்யர்களின் மேல் பலமாகச் சண்டை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறார். இரண்டாவதாக, தாங்கள் கைப்பற்றிய நாட்டில் அதாவது பெல்ஜியம், ஹாலந்து, போலந்து நாடுகளில் உள்ளவர்கள் எல்லாம், "இதேது புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போகிறதே. முருங்கை மரத்துப் பிசாசு வரப்போகிறதேயென்று பயந்து, ஜெர்மானியரே தங்கள் நாட்டில் நீடித்திருக்கும் வழிகளை உண்டாக்க முயல்வார்கள்" என்று எண்ணுகிறார். மூன்றாவதாக ருஷ்யருக்கும், பிரிட்டிஷ்-அமெரிக்கருக்கும் பிளவு உண்டாகுமென்று யூகிக்கிறார். ஆனால் இந் நான்கு நாட்டை ஆளும் புருஷ ரிஷபங்களும், பஞ்சதந்திர எருதுகளை விட மேலான அறிவுள்ளவை என்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை மாஸ்கோவில், வருங்காலத்து திட்டங்கள் எல்லாம் ஐயந்திரிபற முடிக்கப்படுகின்றன. ஜனாதிபதி ரூஸ்வெல்ட், "நம்முடைய நோக்கங்களாகிய அமைதி என்பதும் ஆக்ரமிப்பு இன்மை என்பதும் ஊன்றி நிலைபெற்று நிற்கும்படியான வழிகள் மாஸ்கோவில் கண்டு பிடிக்கப்படுகின்றன. போருக்குப் பின்னும். ருஷ்யா நம்முடன் ஒத்துழைக்கும் எழுத்து வேலைகளும் முடிந்து போயின. கையெழுத்து போடுவது ஒன்றுதான் எஞ்சி நிற்கிறது என்று மூன்று நாட்களுக்கு முன் கூறியிருக்கிறார்."

இந்தியாவின் மேல் வைசிராய் ஆர்வம்

இந்தியாவுக்கு லார்ட் வேவல் அரசப் பிரதிநிதியாக வந்ததை எப்படித் திரித்துப் பிரசாரம் செய்கிறார்கள் பாருங்கள். ஒரு இராணுவத் தலைவர், அரச தந்திரி இருக்கவேண்டிய இடத்திற்கு வந்தது எதற்கு? இனி பிரிட்டிஷார் தங்கள் ஆதிக்கம் நிலை பெறும்படியாக தளர்ந்திருக்கும் திருகுகளையெல்லாம் முடுக்குவதற்காகத் தான் என்று ஜெர்மன் அஜாத் ஹிந்த் ரேடியோ கூறுகிறது. ஆனால், உலகப் போரில் இந்தியா உயர்ந்த நடு நிலையில் நிற்கிறது. அதனால் அதனுடைய ஏற்றம் நன்றாக விளங்கும். ஜப்பான் போரில், இது முக்கிய ஸ்தானத்தைப் பெற்று நிற்கிறது. கிழக்கு ஆசிய தளகர்த்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு, இந்தியாவை முக்கிய இருப்பிடமாகக் கொண்டுள்ளார். இது சமயத்தில் போரில் வல்லவர் இருப்பது சிறந்ததென்று சிலர் எண்ணுகிறார்கள். வேவல் நியமிக்கப்பட்டதும் எல்லாக் கட்சியாரும் இவரைக் கொண்டாடினார்கள். அவரும் 'நான் இந்தியாவுக்கு எடுத்துப் போகும் பெட்டிகளில், ஒன்றில் அன்பு என்பது அடைக்கப்பட்டிருக்கிறது. அதையே நான் துணையாகக் கொண்டு போகின்றேன்' என்று கூறியிருப்பது இந்தியாவின் மேல் அவருக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டும்.

வேவல் செய்த முதல் வேலை

ஆனால் ஜப்பானியர் ரங்கூன் ரேடியோ சொல்வது, ஒரு விந்தை, "வேவல், இந்தியாவில் உண்டாயிருக்கும் பஞ்சத்தை நீக்க உதவி புரியக் கூடாதென்று தீர்மானித்து விட்டார். வங்காளத்தில் இருக்கும் ஏழைகளைப் பற்றியும், அவர்கள் சாவை பற்றியும் அவருக்குக் கவலையே இல்லை" என்கிறது. தான் உத்தியோகம் ஏற்றதும் வேவல் செய்த முதல் வேலை, வங்காளத்துக்குச் சென்று அதன் நிலைமையைக் கண்டு தெளிந்தது தான். தெளிந்தவுடன் வீண் பேச்சுக்களைப் பேச கால தாமதம் செய்யாமல், உத்தரவுகளைப் பிறப்பித்தார். இராணுவ தளகர்த்தனென்பதைக் காட்டி, உடனே பட்டாளத்தார் தங்கள் உணவுகளைக் கொடுத்து உதவ வேண்டுமென்று உத்தரவிட்டு விட்டார். மேஜர் ஜெனரல் வேக்லி என்பவர் பாட்னாவிலிருந்து கல்கத்தாவுக்குப் பறந்து சென்றார். 292,000 டன் எடையுள்ள உணவுப் பொருள்கள் வங்காளத்துக்கு செலுத்தப்பட்டன. பட்டாளத்தில் இருக்கும் வைத்தியர்கள் உடனே வங்காளத்துக்கு அனுப்பப்பட்டார்கள். ஜப்பானியர் பேச்சைப் பொய்ப்படுத்த இதுவே போதும். ருஷ்யாவின் வெற்றியும், ஜெர்மனி பின்னடைவதும், அதை மறைக்க ஜெர்மனியர் செய்யும் பிரசாரமும் வேடிக்கையாய் இருக்கும். ஆனால் இவைகளைப் பற்றி, முன் ரேடியோவில் ஒருவர் பேசியிருக்கிறார்.

ஆடம்பரப் பேச்சுகள் பறந்து போயின

ஆகவே, அதை விட்டு, ஜப்பானியர் நிலைமையை ஆராய்வோம். தலைமை மந்திரி டோஜோ "ஜெர்மானியர் வெற்றியடைவார்கள் என்று நம்புகிறோம்" என்கிறார். இதுவரைப் பேசிய ஆடம்பரமான பேச்சுகளெல்லாம் மறைந்து போயின. தங்கள் நம்பிக்கை இது என்று இப்போது அடக்கமாய்ப் பேசுகிறார்கள் நாடுகளைப் பெறும் நாள் துன்பம்; பிறர் மீட்டுக் காண்டால் கணக்கில்லாத துன்பம், என்பதை இப்போது தான் உணர்கிறார் ஜப்பானியர். பிடிபட்ட நாடுகளில் இருந்து உணவுப் பொருள்கள் இடைக்கின்றன வென்பது உண்மையே. ஆனால், அவைகளைச் செப்பனிட்டு ஒரு வழி நடத்த முடியாமல், இராணுவ வீரர் கையில் இவ்வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சையாம் முதலான நாடுகளுக்குப் பெருந் துன்பம்.

பிபுல் சோன், கிராம் என்பவர் தன்னுடைய சையாம், ஜப்பானியப் போர் சூழ்ச்சியில் அகப்பட்டு அலங்கோலப்படுகிறது என்றார். சற்று முன் சென்னையில் "தண்ணீர், தண்ணீர், எங்கும் தண்ணீர் ஆனால் குடிக்க நீரில்லை" என்றாகியது போல், ஜப்பான் ஊர்களில் பொருள்கள் ஏராளமாயிருந்தும், அவைகள் உண்ணுவதற் கியலாதவையாயிருக்கின்றன. எண்ணெய் ஒன்றைத் தவிர மற்றவைகளை உற்பத்தி செய்வதை நிறுத்தியிருக்கிறார்கள்.

ஜப்பான் கைப்பற்றிய நாடுகளில் மக்கள் நிலைமை

ஜப்பானியருக்கு இருக்கும் கப்பல்களில் 100-க்கு 60 பங்கு வெளிநாடுகளில் இருக்கும் துருப்புகளுக்கு உணவு கொண்டுபோக வேண்டியவைகளாய் இருக்கின்றன. இவைகளில் 5-ல் ஒரு பங்கை, அமெரிக்கர் உடைத்தாலும் ஜப்பானியருடைய நிலை, தடுமாறிப் போம் ஆகையால் செப்டெம்பர் 20-ல் ஜப்பான் ரேடியோ "நம் எண்ணங்களை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். அடியோடு சீர்திருத்திக் கொண்டாலொழிய நாம் அபகீர்த்தி அடைவோம்" என்றது. சாலோமென் தீவுகளில் அவர்கள் எங்கும் துரத்தப்படுகிறார்கள். இது முக்கியமாய் அவர்களுக்குக் கப்பல் இல்லாத குறையால் தான். அரிசியும் அங்கே அதிகமாக இருப்பதாய்த் தெரியவில்லை.

"மெய்ன்சி ஷிம்புன்" என்னும் பத்திரிகையில் வாசி எழுதியது, இங்கே குறிப்பிடத்தக்கது:—"நமக்கு அரிசியில்லாக் குறை ஒன்று மட்டுமல்ல. நாட்டுப் புறங்களில் இருக்கும் மக்கள், துவாலை, சர்க்கரை, சோப்பு, உப்பு, நூல்கயிறு இவைகளுக்கு அலைந்து திரிகிறார்கள்" என்றார். இது எப்ரல் மாதம் 16-ந் தேதி எழுதப்பட்டது. இந்த ஏழு மாதங்களில் நிலைமை எவ்வளவு கேவலமாகி இருக்கிறதோ தெரியவில்லை. மேலும் ஜப்பான் தன்னுடைய துருப்புகளுக்குப் போதுமான முஸ்தீப்புகளை அனுப்ப முடியாமல் தவிக்கிறது. கப்பல்களில்லை என்று எங்கும் கூக்குரல். 600 இடங்களில் கட்டு மரத்தால் கப்பல்களைக் கட்டி, மோடார் வைத்துச் சாமான்களை எடுத்துப் போக முயல்கிறார்கள். வேலை செய்பவர்களும் கைதேர்ந்தவர்களல்லர். வேலைக்காரர்களெல்லாம் மிகச் சிறியவர்கள். முற்றக் கற்றவர் அல்லர். ஆனால் சையாமில் ஏராளமான உணவுப் பொருள் சேர்க்கப்பட்டு இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இதனால் சையாம்காரர்கள் உணவில்லாப் பஞ்சத்திற்கு உள்ளாகிறார்களாம். ஜப்பானைப் பற்றியும், அதனுடைய வலுவைப் பற்றியும், உயர்வாக எண்ணும்போது எல்லாம், அவற்றின் குறைகள் இன்னவை என்று தெரிந்துகொண்டால், நமக்கு அச்சம் நீங்கும்.

பெரு வெள்ளத்தில் படையினர் தொண்டு

வெள்ளம். பெரு வெள்ளம் சென்னையைச் சூழ்ந்து கொண்டது. அப்போது அங்குள்ள படையினரின் மனோ நிலைமை எப்படியிருந்தது? தண்ணீரில் தோய்ந்து நனைந்து போயிருந்தனர். என்றாலும் அவர்கள் முகங்கள் மலர்ந்திருந்தன. ஊக்கமும் உற்சாகமும் தாண்டவ மாடின.

சாதாரணமாகத் தமக்குத் தகுந்தபடி வசிக்க, ஏற்ற கூடாரங்களோ, விடுதிகளோ அளிக்கப்படவில்லை யென்று குறை கூறுவது, படையினர் வழக்கம். ஆனால், இந்தப் பெரு வெள்ளக் காலத்தில், மரத்தின் உச்சிகளிலும், நீரில் மூழ்கியிருந்த லாரிகளிலும் இரவெல்லாம் அவர்கள் நடுங்கிக் கொண்டு குளிரினால் தொல்லைப் பட்டுக் கொண்டிருந்தாலும், அதுபற்றி தன்னிடம் ஒருவராவது குறை கூருததைக் கண்டு, படைத் தலைவர் பெரிதும் ஆச்சரியப்பட்டார்.

வெள்ளத்தில் அடிபடுவது வேடிக்கை யல்ல; மனதிற்கு இன்பந்தரத் தக்க தல்ல. ஆயிரக் கணக்கானவர்களுக்கு மகா கஷ்டமான வேலை தான் ஏற்பட்டது. பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் படையினரும், இந்திய உத்தியோகஸ்தர்களும் படையினரும் மகா ஆபத்தான நிலைமையில் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

சென்னைப் பகுதியில் பெரு வெள்ளம் தாக்கிய உடனே, அந்தப் பகுதியிலுள்ள இராணுவத் தலைவர்கள் தம் ஆயிரக் கணக்கான படையினரை சிவில் அதிகாரிகளிடம் ஒப்புவித்து விட்டனர். இந்தப் படையினரை மிகச் சிறந்த முறையில் சிவில் அதிகாரிகள் பயன்படுத்தினர்.

பெரு வெள்ளத்தின் கனம் மிகுதியினால், சென்னை நகரத்திற்குத் தண்ணீர் 'சப்ளை' செய்யும் பெரிய பெரிய குழாய்கள் இறங்க ஆரம்பித்து விட்டன. உடனே சாப்பர் படையினரின் உதவி கோரப்பட்டது. அவர்கள் வந்து இருட்டென்றும் பாராமல் கடுமையாக உழைத்து, இறங்கிக் கொண்டிருந்த குழாய்களை நிமிர்த்தி, நிலை நிறுத்தினார்கள்.

நகரத்தின் வட பகுதியில் பல குடும்பங்கள் தண்ணீரால் சூழப்பட்டு விட்டன. அப்போது, சுமார் 50 கட்டு மரங்களையும், துறைமுகத்திலிருக்கும் கப்பல்களிலுள்ள 12 படகுகளையும் கொண்டு சுமார் 100 கரையாளர்கள் 24 மணி நேரம் இடைவிடாது உழைத்து, இராணுவ மோட்டார் லாரிகளில் அக் குடும்பத்தினரைக் கொண்டு வந்து சேர்த்தனர்.

இராணுவ லாரிகளும், இராணுவப் போக்கு வரவிற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த இராணுவ லாரிகளெல்லாமும் வெளியூர்களி லிருந்து உணவுப் பொருள்கள் முதலியவற்றை சிவில் அதிகாரிகள் சென்னைக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்குப் பெரிதும் உதவின.

பொது நிலைமையைக் குறித்து முக்கியமான அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டி, பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த விமானம் அங்கே வட்டமிட்டுக் கொண்டே யிருந்தது. சென்னைக்கு வெளிப்புரங்களில் எந்த அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருக்கிற தென்று திட்டமிட்டு அறிவிக்கும் பொருட்டு, விமானங்கள் அவ்வப்போது போய் வந்து கொண்டிருந்தன.

பழுதாகி விட்ட முக்கியமான ரஸ்தாக்களைச் செப்பனிடும் வேலையில் ஒத்திருந்து எப்படி வேலை செய்வது என்பது பற்றி சிவில் இஞ்சினீரிங் இலாகா உத்தியோகஸ்தர்களும் இராணுவ இஞ்சினீரிங் இலாக்கா உத்தியோகஸ்தர்களும் கூடித் திட்டம் வகுத்தார்கள். நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்கள் தம் ஆயுதங்களைக் கொண்டு, ரஸ்தாக்களைச் சுத்தப் படுத்துவதிலும் குளக்கரைகளைப் பலப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தனர். இதன் பயனாக, பொது மராமத்திலாக்கா வேலை பெரிதும் குறைந்து விட்டது.

சென்னையில் சில இடங்களில் 10 அடி ஆழத்திற்குத் தண்ணீர் இருக்கும் போது, மேலும் ஒரு பெரு வெள்ளம் சென்னையை நோக்கி வந்து கொண்டிருப்பதாக ஒரு வதந்தி சென்னையில் பிரமாதமாகப் பரவி விட்டது. இராணுவத் தொடர் போடு வேலை செய்து கொண்டு வரும் ஒரு சிவில் அதிகாரி, எந்தத் திசையிலிருந்து வெள்ளம் வருவதாகக் கூறப் பட்டதோ, அந்தத் திசையை நோக்கி, தன் மோட்டார் காரில் கிளம்பிப் போனார். அந்த வதந்தி மட்டும் உண்மையா யிருந்திருக்குமானால், அவர் மகா ஆபத்திற்குள்ளாகி யிருப்பார். அவர் அந்தப் பகுதியிலுள்ள இராணுவ அதிகாரிகளைக் கண்டார். அங்குள்ள நிலைமை கவலைக் கிடமானதானாலும், பெரும் ஆபத்து ஏற்படாது என்று அவர்களிடமிருந்து தெரிந்து கொண்டார். இந்த நற்செய்தியோடு சென்னைக்குத் திரும்பி வந்தார்.

சென்னைக்கு அக்கம் பக்கத்தில் பள்ளமான இடங்களில் வசித்து வந்தவர்கள் சுமார் 5,000 பேர்கள், சென்னைக்குத் தெற்கே இராணுவ உத்தியோகஸ்தர்களின் விடுதிகளில் வந்து சேர்ந்தார்கள். அந்த விடுதிக்குப் பொறுப்பாளியா யிருந்த இந்தியப் பெண்கள் உதவிப் படை உத்தியோ ஸ்தர் கடுமையாகப் பெய்யும் மழையையும் பொருட் படுத்தாமல், வெள்ளத்தி லிறங்கி இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டு, உதவி கோரி, இராணுவத் தலைவருக்கு டெலிபோன் செய்தார். அந்த இராணுவத் தலைவரும் உடனே உதவி யனுப்புவதாகக் கூறினார். எனவே இடுப்பளவு தண்ணீரில் மீண்டும் நடந்து விடுதி வந்து சேர்ந்து, அங்கு வந்து சேர்ந்தவர்களுக்கு உடனடியாக என்னென்ன உதவிகள் செய்யப்பட வேண்டுமோ அவ்வளவும் செய்தார்.

சீக்கிரத்திலேயே ஒரு இராணுவ லாரி கடும் மழையையும் பொருட் படுத்தாது வந்து கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தினருக் கருகில் அது வந்தவுடனே, சேற்றில் வெகுவாக அழுந்திவிட்டது. அந்த லாரியின அச்சும்கூட அழுந்திவிட்டது. அந்த லாரியை யோட்டிக் கொண்டு வந்தவர் இன்னும் 5 லாரிகள் பின்னால் வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். இரண்டாவது லாரி வந்தது. அழுந்திப் போன லாரியை இழுக்க முயன்றது. ஆனால், அதுவும் அழுந்தியது.

அந்த இந்தியப் பெண்கள் உதவிப் படை உத்தியோகஸ்தர், மீண்டும் தண்ணீரில் இறங்கி நடந்து போய், மேலும் உதவி தேவையென்று படைத் தலைவருக்கு டெலிபோன் மூலம் அறிவித்தார். அவர் திரும்பி வருமுன்னதாகவே அந்த 5,000 பேர்களும் எங்கேயோ போய்விட்டார்கள். அவர்கள் எந்தவித ஆபத்திற்கும் உள்ளாகவில்லை.

ஒரு பகுதியில் மோட்டார் லாரிகளில் இரவு முழுதும் தம் கழுத்தளவு தண்ணீரில் பலர் நின்று கொண்டிருந்தனர். நல்லவேளையாக, மேலும் வெள்ளம் பெருகவில்லை.

மற்றொரு படையைச் சேர்ந்தவர்கள் இரவு முழுவதையும் மர உச்சிகளில் கழித்தார்கள். அதற்கருகிலிருந்த சாப்பர் பட்டாளத்தார் தம் படகுகளைக் கொண்டு யார் யாரை மீட்கக் கூடுமோ அவர்களை யெல்லாம் மீட்டு, பந்தோபஸ்தான இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். வழிப் புரங்களில் விழுந்து கிடந்தவர்களையும் தூக்கித் தம் படகுகளில் போட்டுக் கொண்டு போய்க் காப்பாற்றினார்கள்.

தண்ணீருக்குள் பல லாரிகள் மூழ்கிக் கிடந்தன. அவற்றில் கம்பியில்லாத் தந்தி இயந்திரங்களும் மூழ்கிக் கிடந்தன. அவை மிகவும் மேன்மையான இயந்திரங்கள். அவற்றைக் கழற்றிக்கொண்டு வரும் பொருட்டு படையினர் பலர் தண்ணீருக்குள், தம் வாயில் வில்லை முடுக்கிகளைக் கவ்விக் கொண்டு, மூழ்கிக் கழற்றினர்.

தப்பிப் போக வழியின்றி தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு விமானங்கள் மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

சென்னைக்கு வடக்கே ஒரு கிராமமே தண்ணீரில் மூழ்கி விட்டது. அந்தக் கிராமவாசிகளை ஒரு படைப் பகுதியினர் மீட்டது மட்டு மன்றி, அவர்களுக்கு உணவும் உடையும் இருக்க இடமும் தேடிக் கொடுத்தனர்.

இந்தக் கடுமையான வேலைகளை யெல்லாம் ஒரு தமாஷாகவே தரைப் படையினரும் விமானப் படையினரும் கருதுகிறார்கள். இப்போது நேரிட்ட நெருக்கடி போன்ற சமயங்களில், நாட்டிலுள்ள பொது மக்கள் ஒரு விஷயம் பற்றி உறுதியாயிருக்கலாம். ஒரு சிறிதளவு உதவியாவது படையினர் செய்யக் கூடுமானால், அங்கே கண்டிப்பாக அவர்கள் காணப் படுவார்கள். உடலெல்லாம் உடையெல்லாம் நனைந்திருந்தது. பசியாகவும் இருந்திருக்கக் கூடும். தூக்கமே கிடையாது. அப்போதுங்கூட எவ்வளவு கடுமையான வேலையானாலும் செய்ய, அவர்கள் பின் வாங்கியதில்லை. இவ்வளவு மோசமான நிலைமையிலுங் கூட அவர்கள் மகிழ்வோடே தான் இருக்கிறார்கள்.

புரசைவாக்கத்திலும், பெரம்பூரிலும் அவற்றை யடுத்துள்ள இடங்களிலும் ஏறக்குறைய எல்லாத் தெருக்களிலும் வெள்ளம் பெருகி விட்டது. அங்கிருந்தவர்கள் தம் வீடுகளின் கூறைகளின் மீது ஏறிக் கொண்டு வெள்ளத்திற்குத் தப்ப முயன்றனர். மகா மனோ வேதனையோடு அங்கேயே மணிக்கணக்கில் அவர்கள் தங்கி யிருக்கவேண்டி வந்தது. ஏனென்றால், தாம் இருக்குமிடத்தையும் வெள்ளம் மேவி விடுமோ என்ற அச்சம் ஒரு புரம். மற்றொருபுரம் தாம் ஏறியிருக்கும் வீடு, இடிந்து விழுந்து விடுமோ என்ற பயம். இப்படிப்பட்ட சமயத்தில் தான், மீட்சிக் கோஷ்டியினர் தேவை என்று இராணுவ அதிகாரி ஒருவருக்கு போலீசார் தகவலனுப்பினார்கள். உடனே, அங்கே இருந்த ஆட்களை அழைத்துக் கொண்டு சில கட்டு மரங்களுடன் அந்த இடத்திற்கு அந்த அதிகாரி விரைந்து வந்தார். சில படகுகளையும், தேவையான மற்ற சாமான்களையும் கையோடு எடுத்துக் கொண்டு வந்தார். பல கோஷ்டிகளாகப் பிரிந்து. பல திசைகளிலும் போனார்கள். ஆண்களையும், பெண்களையும் குழந்தைகளையும் நூறறுக்கணக்கில் மீட்டார்கள். சில இடங்களில் பெருங் கஷ்டங்களுக் கிடையில் அவர்கள் வேலை செய்ய வேண்டி யிருந்தது. வெளிச்சமில்லை. ரோடுகள் சந்திக்கு மிடங்களில் வெள்ளத்தின் வேகம் வெகு அதிகமா யிருந்தது. கடலில் நீந்தி நன்றாகப் பழகிய அவர்களுங் கூட, பல சமயங்களில் ஆபத்தான நிலைமையி லிருந்தனர். என்றாலும் கொஞ்சங் கூட மனத்தளர் வில்லாமலும், பெரும் ஊக்கத்தோடும் தொடர்ந்து வேலை செய்தார்கள். அநேகம் பேர்களைப் பாதுகாப்புள்ள இடங்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

இடைவிடாது $1\frac{1}{2}$ நாட்கள் வேலை செய்தனர். சென்னையின் சரித்திரத்திலே இதுவரை ஏற்பட்டிராத மகத்தான சேதத்தையும் நாசத்தையும் இந்த வெள்ளம் உண்டாக்கி விட்டது. அப்போது கடுமையான துன்பத்திற்கு ஆளான சென்னை மக்களுக்கு, இவர்கள் ஒரு சிறிது தொண்டு புரிய இயன்றது பற்றி மிகவும் திருப்தி. இந்தச் சமயத்தில் கஷ்டங்களுக்கு உள்ளானவர்களுக்கு உடனே தகுந்த படி உதவி செய்ய வேண்டியதற்கு அரசாங்கத்தார் தேவையான முறைகளைக் கையாண்டனர். இது பற்றி சென்னைப் பொது மக்கள் அரசாங்கத் திற்கு நன்றி செலுத்த வேண்டும். அவர்களுடைய நிர்வாகத் திறமை எப்போதும் போல் உயர்ந்த நிலைமையில் தான் இருக்கிறது. இந்த நெருக்கடியான நிலைமையில், அரசாங்கத்தின் கௌரவத்தை நிலை நிறுத்துவதில், உதவியா யிருந்தது நியாயந்தான்.

விவசாயக் கருவிகள் செய்ய இரும்பு எஃகு விற்பனை

இராமங்களில் கொல்லர்களுக்கும் விவசாயிகளுக்கும் தேவையான ஆயுதங்களை இரும்பைக் கொண்டும் எஃகைக் கொண்டும் செய்வது பற்றியும், இராமத் தொழில்களுக்குத் தேவையான பொருள்களை அவற்றைக் கொண்டு செய்வதைப் பற்றியும், சென்னை வட்டம் இரும்பு, எஃகு டிபுடி கண்ட்ரோலர் கூறியிருக்கும் கீழ்க் கண்ட ஆலோசனைகளை அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும், அனுபவத்தில் என்னென்ன திருத்தங்கள் தேவைப்படும் என்று தோன்றுகிறதோ, அந்தத் திருத்தங்களும் அவ்வப்போது அமுலுக்கு வரும். இது சம்பந்தமாக வகுக்கப்பட்டிருக்கும் திட்டப்படி, எந்தெந்த வியாபாரிகளைக் கொண்டு இந்தக் கருவிகள் செய்வதற்கான பொருள்கள் விற்கவேண்டு மென்று 'டிபுடி கண்ட்ரோலர்' நிர்ணயிப்பார். அன்றியும் அந்த சரகத்தைச் சேர்ந்த ரிவின்யு இலாகா கெஜெடெட் உத்தியோகஸ்தர்கள் சிபார்சையும் அனுசரித்துத் தான் வியாபாரிகளை 'டிபுடி கண்ட்ரோலர்' நியமிப்பார். 'டிபுடி கண்ட்ரோலர்' அவர்களால் நியமிக்கப்படும் வியாபாரிகளிடம் உள்ள இரு பிலிருந்து தேவைப்படும் மனுதார்களுக்கு அவை விநியோகிக்கப்படும். திருட்டுத் தனமாக சரக்குகளை விற்காதபடி தடுப்பதற்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு தாலூக்காவிலும் தேவைப் படும் அளவிற்கு, விவசாயக் கருவிகள் செய்வதற்கு வேண்டிய இரும்பு, எஃகுப் பொருள்கள் தாலூகாக்களிலுள்ள விவசாய 'டிமான்ஸ்ட்ரேட்டர்' இடமும், அவர் இல்லாத தாலூகாக்களில் ஜில்லா விவசாய உத்தியோகஸ்தரிடமும் இருப்பு வைக்கப்படும். விவசாய 'டிமான்ஸ்ட்ரேட்டர்' அவர்களிடமிருந்து விவசாயிகள் தமக்குத் தேவைான பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தென்னிந்திய விமானப் பயிற்சி சாலை

நேரில் கண்டவரின் கருத்துக்கள்

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய விமானப் படைகள் அனைத்திலும் மிகவும் இளமையானது, இந்திய விமானப் படைதான். இது ''புதிய இந்தியா''வுக்கு மிகவும் ஏற்றது என்று கூறுவது மிகவும் பொருத்தந்தான். இது தோன்றி 10 வருஷங்களாகின்றன. பிரிட்டிஷ் விமானப் படையைப் போலவே இதையும் அமைத்திருக்கிறார்கள். இப்போது அதன் குழந்தைப் பருவம் நீங்கி, வாலிபப் பருவம் அடைந்திருக்கிறது.

1938-ம் வருஷம் இந்தப் படை அமைக்கப்பட்டபோது மிகக் கொஞ்சம் பேர்கள் தான் அதற்குத் தேவையா யிருந்தனர். சென்ற இரண்டு வருஷங்களில் இது வெகுவாகப் பெருகிவிட்டது. ஆகவே, இதற்கு அதிக உத்தியோகஸ்தர்களும் ஆட்களும் தேவைப்பட்டனர். இதனால், இவர்கள் அனைவருக்கும் பயிற்சி யளிக்கத் தக்கதோர் பயிற்சி சாலையை அமைக்க வேண்டியதாயிற்று.

தென்னிந்தியாவி லுள்ள ஆரம்பப் பயிற்சி சாலையை நான் அன்று போய்ப் பார்வையிட்டேன். அங்கே நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தம் புதிய வாழ்க்கை முறைகளைக் குறித்துப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார்கள். இந்த உத்தியோக வாழ்க்கை எதிர் காலத்தில் மிகச் சிறந்து பொலிவுடன் விளங்கும். இங்கே அவர்கள் ஒழுங்கு முறைகளைப் பயிலுகிறார்கள். உண்மைச் சகோதரத்துவம் என்ன வென்பதை உணருகிறார்கள்; தம் உத்தியோகத்தைக் குறித்துப் பெருமை கொள்ளுகிறார்கள்.

ஒரு புதிய எண்ணம்

இந்தப் பயிற்சியில், கல்விப் பகுதியும் புதிதாக இப்போது இணைக்கப் பட்டிருக்கிறதாக அந்தப் படைத் தலைவர் அறிவித்தார். விமானப் படையில் புதிதாகச் சேருகிறவர்கள், தக்க உடற் கட்டுள்ளவர்களா யிருந்த போதிலும், தகுந்தபடி கல்வியுள்ளவர்களா யில்லை. என்றாலும் இந்த இளைஞர்களை விலக்சி விடுவதில்லை. அவர்களுக்கு ஓரளவு கல்வியளிக்கப் படுகிறது. இதன் பிறகு, ஏறக்குறைய எல்லோரும் கல்விப் பரீட்சையில் தேறி, ஆரம்ப ஒழுங்கு முறைப் பயிற்சி பெறத் தொடங்குகிறார்கள். இவர்கள் அனைவரும் ஆரம்பப் பயிற்சிப் பரீட்சைகளில் தேறவேண்டுமென்னும் அக்கரை கொண்டிருக்கிறார்கள்.

தென்னிந்தியாவிலுள்ள பெரிய நகரங்கள் முதல் சிறிய கிராமங்கள் வரையிலு மிருந்து இளைஞர்கள் ஏராளமாய் இங்கு வந்து சேருகிறார்கள். வந்து சேர்ந்த வுடனே, அவர்களுடைய, இருதயம், நுரை ஈரல், கேட்குந் தன்மை, பார்வை ஆகிய வற்றை வைத்தியர் வெகு கவனமாகச் சோதிக்கிறார். பிறகு கல்விப் பரீட்சை நடைபெறுகிறது. ஆங்கில மொழியிலும் கணக்கிலும் அவர்களை கல்வி அதிகாரி சோதிக்கிறார். இவ்விரண்டும் இந்திய விமானப் படைக்கு மிகவும் முக்கியமானவை. இவற்றில் தேறிய பிறகு, இராணுவ உடுப்பும் மற்ற அணிகலன்களும் கொடுக்கப்படுகின்றன.

தனக்குத் தேவையான அனைத்தையுங் கொண்டதோர் பட்டணம் போல் விளங்குகிறது இந்தப் பயிற்சி சாலை. இது அமைந்திருப்பது ஒரு கிராமப் புரத்தில். என்றாலும் ஒரு நகர வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய எல்லா வசதிகளும் அங்கேயும் கிடைக்கின்றன. நல்ல உணவு, படுத்துறங்குவதற்கும், சாப்பிடுவதற்கும் ஏற்ற அறைகள், பிரசங்க அறைகள், எல்லா உணவுப் பொருள்களும் உள்ள உணவுச் சாலைகள், விளையாடுவதற்கான மைதானங்கள், இந்தியப் படங்களும் இங்கிலீஸ் படங்களும் காட்டப்படும் சினிமாக் கொட்டகைகள் முதலிய பல வசதிகளும் அங்கே அமைந்திருக்கின்றன.

இந்திய விமானப் பயிற்சி சாலை

கமிஷன் பெருத பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் இந்திய உத்தியோகஸ்தர்களும் கவாத்து மைதானத்தில், தம் குவிந்த புயங்களை நிமிர்த்திக் கொள்ளுகிறார்கள். தகடு போன்றிருந்த மார்புகளை அகலமடையச் செய்கிறார்கள். இந்த உத்தியோகத்திற்குத் தேவையான சுறு சுறுப்பும் கம்பீரமும் பெறுகிறார்கள். இந்த நிலைமையை அவர்கள் அடைவதற்கு உதவும் பல வகை விளையாட்டுக்களும் பொழுது போக்கு வகைகளும் அங்கே உண்டு.

பள்ளிக்கூட அறையில்

பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும் அறையில் ஆசிரியர் மிகவும் எளிய நடையிலும் தெளிவாகவும் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார். உத்தியோகஸ்தர்களுடைய நடவடிக்கைகள், கவாத்து, சலாம் செய்யும் முறை, இந்திய விமானப்படை நிர்வாகம், கணக்கு, பீரங்கிப் பிரயோகம், விமான மோட்டுதல், முதலிய பாடங்களை அவர் போதிக்கிறார். இவை, எதிர் காலத்தில் இந்திய விமானியாக வேண்டியவர், கட்டாயம் தெரிந்திருக்க வேண்டியவை.

இங்கே தான் இந்திய விமானப் படைக்கு இளைஞர்கள் ஆயத்தமாகிறார்கள். பிறகு விசேஷப் பயிற்சி சாலைகளுக்கு மாற்றப் படுகிறார்கள். அங்கே இன்னின்னார், இன்னின்ன வகை வேலைக்கு ஏற்றவர் என்று பாகு படுத்தப்படுகிறது.

தொழிலில் திறமையும், தலைமை தாங்கி நடத்தவும் கூடியவர்களைப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்குக் கமிஷன் பதவிகள் வழங்கப்படுகின்றன. நெடுங்காலம் உழைத்தவர்களுக்குத் தான் இது வழங்கப்படவேண்டுமென்னும் நியதி யில்லை. அவர்களுடைய உத்தியோக காலத்தில் எப்போது வேண்டுமானாலும் இது வழங்கப்படலாம். விமானப் படையைச் சேர்ந்தவர்களுள் அநேகம் பேர்கள் கமிஷன் பதவிகளை யடைந்து விட்டனர். திறமையுள்ளவர்கள் மட்டுந் தான் இதில் வெற்றி பெறலாம்.

விமான மோட்டவும், வேவு பார்க்கவும் மட்டும் இந்த இளைஞர்களுக்கு இந்திய விமானப்படை சொல்லிக் கொடுக்கவில்லை. விமானப் படை உத்தியோகத்தி லிருந்தாலும், இல்லாவிட்டாலும், நல்ல சம்பளங் கிடைக்கக் கூடிய தொழில்களிலும் தேர்ச்சி பெறுகிறார்கள்.

அங்கே சாதி மத வேற்றுமையே கிடையாது. உத்தியோகஸ்தர்களுக்கும் படையினருக்கும் நல்ல கூட்டுறவு உண்டாகிறது. இவர்கள் சேர்ந்தது தான் இந்தப் படை. இது தான் இந்தியாவின் எதிர்கால விமானப் படையாகவும் அமையும்.

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

தாக்காதிருக்க வேண்டுமென்பதற்காகத் தான் இதில் கையெழுத்திட்டது. 1941-ம் வருஷம் ஜூன் மாதம் ஹிட்லர் ரஷ்யாமீது போர் தொடுத்தபோது, தன் சொந்த நன்மையை முன்னிட்டுத் தான் இந்தப் போராட்டத்தில் சிக்கிக் கொள்ளவில்லை. 1941-ம் வருஷம் டிசம்பர் மாதம் பசிபிக் தீவுகளில் ஜப்பான் யுத்தத்தை ஆரம்பித்தபோது, தான் சொந்த நன்மையை முன்னிட்டுத் தான் ரஷ்யாவும் தன் மகத்தான சைபீரியா தளங்களிலிலிருந்து ஜப்பானைத் தாக்கவில்லை. ஜப்பான் ரஷ்யாவுடன் கையாண்ட அதே தந்திர முறையை ரஷ்யாவும் அஃதுடன் கையாண்டு விட்டது. வாழ்வதா, வீழ்வதா எனத் தக்க முறையில் ஜெர்மனியோடு ரஷ்யா போராடிக் கொண்டிருக்கும் போது, தம்மோடு சமரச ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் ஜப்பானோடும் போராடத் துணிவது பெருந் தவருகத் தான் முடிந்திருக்கும். அதனால் தான் தூரக்கிழக்குப் போராட்டத்தில் ரஷ்யா பங்கு கொள்ளவில்லை.

அல்லாமலும் 1941-ம் வருஷம் ஜூலை மாதத்தில் இங்கிலாந்திற்கும் ரஷ்யாவிற்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தில் ஜப்பானோடு ரஷ்யா போராட வேண்டுமென்னும் நிபந்தனை கிடையாது. ஹிட்லரோடு மட்டும் போராடுவதற்குத்தான் அந்த ஒப்பந்தம் இடங் கொடுக்கிறது.

இந்த நிலைமையைச் சுருக்கித் தெளிவாக ''லண்டன் டைம்ஸ்'' பத்திரிகைக் கீழ்க்கண்டவாறு எழுதுகிறது:— ஐரோப்பியப் போராட்டத்தில் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் ரஷ்யா, தாமாகவே ஜப்பானுடனும் விரோதித்துக் கொண்டு கஷ்டப்பட வேண்டுமென்று நேசநாடுகளைச் சேர்ந்த பொறுப்புள்ள ஒருவர் கூட நினைக்க மாட்டார்.'' அதுபோலவே கடுமையான போராட்டத்தில் சிக்கியிருக்கும் ஜப்பான் ரஷ்யாவோடு போராட வேண்டுமென்று விரும்பவில்லை.

இந்த இரு நாடுகளும் எவ்வளவு காலம் வரை ஒன்றோடொன்று போராடாம லிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நல்லது. ரஷ்ய அரசாங்கப் பிரிதிநிதிகளும் ஜப்பானிய அரசாங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட அந்த டோக்கியோ விருந்து, எதைக் குறிக்கிற தென்றால், அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட நட்பையும், வசதியை யடிப்படையாகக் கொண்ட ஒற்றுமையையுந் தான் குறிக்கிறது.

(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

கொடுமைகளும் அதிகமாகின்றன. கொடுஞ் செயல்களாற்றும் ஜெர்மன் அரக்கர்களை நம்மவர்கள் மன்னிக்கவே மாட்டார்கள், கட்டாயம் அவர்களைத் தண்டிப்போம்.

ஹிட்லரை ஒழிக்க வேண்டி ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை, பலமாகவே வேரூன்றி யிருக்கிறது. கிழக்கே, அடையும் தோல்விகளாலும், மேற்கே நேச நாடுகள் அடிக்கும் அடிகளாலும், ஜெர்மனி சிதறிக் கொண்டிருக்கிறது. இத்தாலி ஏற்கெனவே போராட்டத்தினின்று விலகிக் கொண்டது. ஹிட்லரின் மற்ற கூட்டாளிகளும் விரைவில் விலகிக் கொள்ள ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நேச நாடுகளின் 5 கடமைகள்

நேச நாடுகளுக்கு 5 கடமைகள் உண்டு. அவையாவன :—

1. ஹிட்லரின் கொடுங்கோன்மையினின்று ஐரோப்பிய மக்களை விடுவிப்பது.
2. விடுவிக்கப்பட்ட மக்கள் தம் இஷ்டம் போல, ஒரு அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள உரிமையும் சுயேச்சையும் வழங்குவது.
3. குற்றங்களும் அக்கிரமங்களும் நடைபெறுவதற்குக் காரணர்களா யிருந்தவர்களைக் கடுமையாகத் தண்டிப்பது.
4. புதிய ஜெர்மன் படையெடுப்பு எதுவும் ஏற்படா திருக்கத் தக்க பருவத்தை ஐரோப்பாவில் ஏற்படுத்துவது.
5. ஜெர்மன் பாசிஸ்டுக் கொடுங்கோன்மையினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த பகுதிகளை, மீண்டும் அவர்கள் அடையத் தக்கவாறு செய்வதற்கு, மக்களுக்குள் பலமான தோர் கூட்டுறவை உண்டாக்குவது.

செம்படையினரும் சோவியத் மக்களும், பெரும் வெற்றிகள் பெற்றுவிட்டார்கள். இதனால், அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டுமென்று அர்த்த மல்ல. ஏனென்றால் முடிவான வெற்றி இலகுவில் கிடைக்காது. கடுமையாக மேலும் போராட வேண்டித் தான் இருக்கும்.

வெற்றி தானாகவே கிடைக்காது, போராடினால் மட்டுந் தான் கிடைக்கும். வெற்றி அணுகிவிட்டது. அதை யடைய வேண்டுமானால் நம் பலங்களை யெல்லாம் திரட்டவேண்டும். ஊர்ப்புறங்களி லுள்ளவர்கள் தியாக உணர்ச்சியோடு வேலை செய்ய வேண்டும். போர் முனையில் செம்படைகள் திறமையோடும் உறுதியோடும் போராடவேண்டும். இப்போது நமக்குள்ள சாதகங்களை யெல்லாம் பயன் படுத்திக்கொண்டு, எதிரியை வெகு விரைவில் விரட்டி யடித்து விடா விட்டால், பாசிஸ்டு கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கும் சோவியத் மக்களுக்கும் ஜெர்மானியரின் அக்கிரமங்களுக்கு ஆளாகி யிருக்கும் ஐரோப்பிய மக்களுக்கும் இந்த வெற்றிகள் அற்பமாகத் தோன்றும்.

எதிரிக்குக் கொஞ்சமும் ஓய்வு தரக் கூடாது. ஆகையால் தான், எதிரியை அடியோடு அழித்து விடத் தக்கபடி நம் படைகளை யெல்லாம் ஊக்கி, பலப் படுத்த வேண்டும். நியாயத் தீர்ப்பு நாள் நெருங்கிவிட்டதென்று தெளிவாகத் தெரிகிறது. நம் நாட்டைத் தாக்கியவர்களை இங்கிருந்து அடியோடு விரட்டி விடத் தக்க நிலைமைக்கு இந்த யுத்தம் வந்துவிட்டது.

ஓயிட் ரஷ்யா, உக்ரேன், கிரிமியா, லட்வியா, எஸ்டோனியா, லிதுவேனியா, மொல்டோவியா ஆகிய பகுதிகளிலிருந்து எதிரியை அடியோடு விரட்டி யடிக்கக் கூடிய காலம் வந்து கொண்டிருக்கிறது. கரேலியன் பின்னிஷ் குடியரசு மீண்டும் சுயேச்சை யடையும்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

நவம்பர் 4.—பகலில் ஜெர்மன் தளங்களான வில்ஹெல்ம்ஷேவன் மீதும், டஸ்ஸல்டார்ப் மீதும் சுமார் 1,000 நேச நாட்டு விமானங்கள் மகா கடுமையாகத் தாக்கின.

நவம்பர் 6.—பிரான்சிலும், மேற்கு ஐரோப்பாவிலு முள்ள ஜெர்மன் படைகளுக்குத் தலைவரா யிருக்கும் பீல்ட் மார்ஷல் பான் ரன்ஸ்டெட் ஹிட்லருக்கு ஒரு கடிதமனுப்பி யிருக்கிறார். அதில், மானிட அறிவைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்தால், யுத்தத்தில் தாம் தோற்று விட்டதாகத் தான் சொல்ல வேண்டுமென்று அவர் குறிப்பிடுகிறார். ஆகவே ஹிட்லர் தன் பதவியை ராஜிநாமாச் செய்து விட வேண்டு மென்றும் குறிப்பிடுகிறார்.

நவம்பர் 7.—இரண்டாம் போர் முனைக் கென்று இராணுவ உத்தியோக நியமனங்கள் பற்றிய பூர்வாங்க வேலைகள் லண்டனில் முடிவடைந்து விட்டன வென்று வாஷிங்டனிலிருந்து வெளிவரும் 'ஆர்மி அன் நேவல் ஜர்னல்' என்னும் பத்திரிகை வெளியிடுகிறது.

நவம்பர் 8.—கைதேர்ந்த நாஜிகளுக்கு ஹிட்லர் ம்யூனிச்சில் ஒரு பிரசங்கம் செய்தார்.

அமெரிக்காவும், அட்லான்டிக்கும்.

நவம்பர் 4.—மாகாணப் பகுதிக் கமிட்டித் தலைவரான செனடர் மில்லார்ட் டைடிங்கன் புதிய பிலிப்பைன் சுயேச்சை மசோதாவைப் பிரேரேபித்தார்.

நவம்பர் 5.—அந்நிய நாட்டு சம்பந்தக் கமிட்டியார் அங்கீகரித்தபடி, யுத்தம் முடிந்த பிறகு சர்வதேச ஒத்துழைப்பு எப்படி யமைய வேண்டு மென்பது பற்றிய தீர்மானத்தை, செனட் சபை நிறைவேற்றியது. மாஸ்கோ மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் 7 அம்சங்களும் இதிலும் இருக்கின்றன.

அமெரிக்க இராணுவத் தலைவர்களான ஜெனரல் ஜார்ஜ் மார்ஷல் (உத்தியோகஸ்தர்கள் நியமனத் தலைவர்), அட்மிரல் எர்னஸ்ட்கிங் (கடற் படைத் தலைவர்), ஜெனரல் ஹென்ரி ஆர்னல்ட் (விமானப் படைத் தலைவர்) முதலியோரை திடீரென்று வந்து கூடும்படி மிஸ்டர் ரூஸ்வெல்ட் அழைத்திருக்கிறார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

நவம்பர் 4.—சென்ற அக்டோபர் மாதத்தில் 10-வது அமெரிக்க விமானப் படை சாதித்துள்ள அருஞ்செயல்களைக் குறித்து, தென் கிழக்கு ஆசியாவில் அமெரிக்க விமானப் படைத் தலைவராயிருக்கும மேஜர் ஜெனரல் ஜார்ஜ் இ. ஸ்டேட்மியர் ஒரு அறிக்கை விடுத்தார்.

இந்திய உணவுப் பொருள் நிலைமை பற்றி காமன்ஸ் சபையில் விவாதித்தனர்.

நவம்பர் 5.—உள் நாட்டுப் பாதுகாப்பு நிரந்தரக் கமிட்டி, புது டில்லியில் சர் பரோஸ்கான் நூன் தலைமையிற் கூடியது.

நவம்பர் 6.—பர்மா எல்லைப்புரத்தில் தான் சமீபத்தில் பார்வையிட்ட படைகளைப் பாராட்டி மேன்மை தங்கிய பிரதம தளபதி ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

நவம்பர் 7.—வங்காளத்தில் உணவுப் பஞ்ச நிலைமையில் படைகள் எந்தெந்த வகைகளில் உதவி செய்கின்றன வென்று மேன்மை தங்கிய இந்திய பிரதம படைத் தலைவர் பத்திரிகைக்காரர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.

நவம்பர் 8.—இந்தியா சட்ட சபை இன்று ஆரம்பமானது. மேன்மை. தங்கிய வைசிராய் அதற்கு ஒரு சுருக்கமான செய்தி யனுப்பி யிருக்கிறார்.

க்ர்க்கிக்கு சில மைல்கள் தூரத்திலுள்ள டிஜி என்னு மிடத்தில் ஒரு விமானம் விழுந்து நொறுங்கியதனால் 38 பேர்கள் மாண்டார்களென்றும் 7 பேர்கள் கடுமையாகக் காயப்பட்டார்களென்றும் தெரிகிறது.

மேன்மை தங்கிய மகா தளபதி லார்ட் லூயி மௌண்ட் பாட்டனுடனும், மேன்மை தங்கிய இந்திய பிரதம படைத் தலைவர் சர் க்ளாட் ஆகின் லெக்குடனும் கலந்து பேசும் பொருட்டு நெதர்லந்து படைகளின் பிரதம தளபதி வைஸ் அட்மிரல் சி. இ. எல். ஹெல்பிரிச் டில்லி வந்து சேர்ந்தார்.

ரஷ்யாவும், பின்லந்தும்.

நவம்பர் 4.—அலெஷ்கியை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டனர். டினீப்பர் ஆற்று வளைவில், கடுமையான யுத்தம் மூண்டது. கியெபுக்கு வடக்கே ஜெர்மானியர் தற்காப்புப் போராடினார்கள்.

நவம்பர் 5.—ரஷ்யப் போராட்டத்தின் போக்கு மாறி விட்டது. இரண்டாவது டினீப்பர் போராட்டம் ஆரம்பமானது. சென்ற 4 மாதங்களில் 90,650 சதுர மைல்கள் ரஷ்யாவில் மீண்டன. போர் முனையின் நீளம் 1,200 மைல்கள். இது நடுக 180 முதல் 270 மைல் தூரம் செம்படைகள் முன்னேறி யிருக்கின்றன. 38,000 இடங்களை மீட்டிருக்கின்றன. இவற்றுள் 160 பட்டணங்கள். ஜெர்மானியர்களில் கொல்லப் பட்டவர்கள் 9 லட்சம் பேர்கள் ; யுத்தக் கைதிகளானவர்கள் 98,000 பேர்கள்.

ஜெர்மனி தம்மைத் தாக்காதபடி ரஷ்யாவும் செக்கோஸ்லோவேகியாவும் 20 வருஷ ஒப்பந்தம் ஒன்றைப் பேசி முடித்து விட்டன. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டி டாக்டர் பினேஷ் மாஸ்கோவிற்குப் போவா ரென்று தெரிகிறது.

நவம்பர் 6.—முதலாவது உக்ரேனியப் போர் முனையிலுள்ள ரஷ்யப் படைகள் கியெபைக் கைப்பற்றிவிட்டன.

சோவியத் ருஷ்யாவின் 26-வது ஆண்டு விழாவை முன்னிட்டு மார்ஷல் ஸ்டாலின் ஒரு பிரசங்கம் செய்தார்.

தோழர் மலோடோப் தமக்குக் காட்டிய அன்பு பற்றி மிஸ்டர் ஈடனும் மிஸ்டர் கார்டெல் ஹல்லும் நன்றி கூறி செய்திகள் அனுப்பினர்.

நவம்பர் 7.—முதலாவது உக்ரேனியப் படைகள் பாஸ்டோப்பைக் கைப்பற்றின.

கிரிமியாவில் ரஷ்யர்களும் ஜெர்மானியர்களும் மகா கடுமையாக மாறி மாறிப் போராடுகின்றனர். சோவியத் ரஷ்ய அரசாங்க சபைத் தலைவரான தோழர் கலினினுக்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட், சோவியத் ருஷ்யாவின் 26-வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஒரு வாழ்த்துச் செய்தி யனுப்பி யிருக்கிறார்.

நவம்பர் 8.—கியெப்புக்கு அப்பால் 40 மைல் தூரம் ரஷ்யர்கள் முன்னேறி விட்டார்கள்.

கிரிமியாவிலுள்ள கெர்ச் நகரத்தை கடற் படையினரும் தரைப் படையினரும் படிப்படியாக வளைந்து கொண்டனர்.

ரஷ்யாவோடு. தனிப்பட்ட முறையில் சமாதானம் செய்து கொள்வது சம்பந்தமாக, பின்லாந்து சமாதானக் கட்சியினர், இரண்டு முறை கூடி, என்னென்ன முறைகளைக் கைக் கொள்ள வேண்டு மென்று விவாதித்தனர்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

நவம்பர் 4.—இசெர்னியாவை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின. 5-ம் படை வெனிப்ரோவைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

நவம்பர் 5.—ஜெர்மானியர்கள் வெனிப்ரோவைக் காலி செய்து விட்டனர்.

அட்ரியாடிக் கடற்கரை யோரத்திலுள்ள சான் சால்வோ; கார்பியோன்னு என்னு மிடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

ரோமாபுரிக்குப் போகும் வழி, விரைவில் சுத்தமாகிக் கொண்டு வருகிறது.

நவம்பர் 6.—முன்னே போகும் நேச நாட்டுப் படைகளின் பகுதியினர், காரிக்லியானோ ஆற்றைக் கடந்து விட்டனர்.

வாஸ்டோ, டுரோமியா, ப்ட்ராகுபா என்னுமிடங்களை 8-ம் படை கைப்பற்றிக் கொண்டது.

இத்தாலிய மன்னருக்கு விரோதமான ஆர்ப்பாடங்கள் நேப்பில்ஸ் நகரத்தில் நடை பெற்றன. அவற்றில் கௌண்ட் ஸ்போர்ஸா பங்கெடுத்துக் கொண்டார்.

நவம்பர் 7.—கல்லக்சியோவை 5-ம் படையினர் கைப்பற்றிவிட்டனர்.

நாஜிப் படைகள் காரிக்லியானோ போர் முனைக்குப் பின் வாங்கிக் கொண்டு வட இத்தாலியிலிருந்து உதவிக்குப் படைகளைத் தருவிக்கின்றனர்.

நவம்பர் 7.—குபெல்லோ, பால்மோலி, டபில்லோ ஆகிய இடங்களை எட்டாம் படையினர் கைப்பற்றிக் கொண்டனர்.

நவம்பர் 8.—ஐந்தாம் படை ரிக்னுனோவையும், எட்டாம் படை காரின்-ஷியோ, ஸ்கெர்னி ஆகிய இடங்களையும் கைப்பற்றின.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

நவம்பர் 4.—க்ரீசிலுள்ள அரிபோஸ் விமான தளத்தை வடமேற்கு ஆப்பிரிக்க விமானப் படையைச் சேர்ந்த வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

நடு நிலைமை நாடுகள்.

நவம்பர் 4.—மிஸ்டர் ஈடன் கெய்ரோ வந்து சேர்ந்தார்.

நவம்பர் 5.—போப்பாண்டவரின் வாடிகன் நகரம் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டது.

நவம்பர் 6.—மிஸ்டர் ஈடன், துருக்கி அன்னிய நாட்டு மந்திரியான மிஸ்டர் மெனெமெஞ்சோக்லுவைச் சந்தித்தார். அப்போது, துருக்கியிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகரான சர் ஹியூ நாச்புல்லும் இருந்தார்.

மிஸ்டர் ஈடனுக்கும் மிஸ்டர் மெனெமெஞ்சோக்லுவுக்கும், பரூக் மன்னர் பேட்டி தந்தார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

நவம்பர் 4.—பசிபிக் மகா சமுத்திரத்திலும், தூரக் கிழக்குக் கடல்களிலும், அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் 10 ஜப்பானிய கப்பல்களை மூழ்கடித்தன. ரபாலைத் தாக்கிய போது, நேச தேச விமானங்கள் 67 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின.

நவம்பர் 5.—சூங்கிங்கில், பிரிட்டிஷ் அமெரிக்க சீன இராணுவத் தலைவர்கள் கூடிப் பேசி போராட்டத்தை நடத்துவதற்கான முறைகளை வகுத்திருக்கிறார்கள்.

ஜெனரல் ஷியாங்-கெய்-ஷேக்சின் விசேஷ பிரிட்டிஷ் இராணுவப் பிரதிநிதியாக, லெப்டினெனட் ஜெனரல் எ. கார்ட்டன் டிவியார்ட் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் மிஸ்டர் சர்ச்சிலுடைய பிரதிநிதியாக பாதுகாப்பு மந்திரியா யிருப்பார். அன்றியும் தென் கிழக்குப் பசிபிக் பிரதம படைத் தலைவராகவு மிருப்பார்.

ரபாலை ஜப்பானியர்கள் வெகுவாக பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நவம்பர் 6.—ரபாலை நோக்கி வந்து கொண்டிருந்த 53 ஜப்பானிய யுத்தக் கப்பல் கூட்டத்தை நூற்றுக்கணக்கான அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கி தூள் தூளாக்கி விட்டன.

டொட்டகுவா, புருவடா தீவுகளை அமெரிக்கக் கப்பற் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

நவம்பர் 7.— ஜெனரல் மெக்கார்தருக்குத் துணையாகவும், தன் பிரதிநிதியாகவும் லெப்டினெனட் ஜெனரல் ஹெர்பெர்ட் லம்ஸ்டனை, பிரதம மந்திரி சர்ச்சில் நியமித்திருக்கிறார்.

நவம்பர் 8.—நியூ கினியில் பின்ஸ் சேவனுக்கு மேற்கே ஸ்டெல்பெர்க் ரோடில் ஜப்பானியப் படைகளை யடுத்து நேச தேசப் படைகளும் கைப்பற்றிக் கொண்டிருக்கின்றன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.